# விவிலிய வினாடி வினா

## சரியான விடைகளை எழுதியவர்கள்

**அருட்சகோதரிகள்**

ஜோஸ்பிட்டா மேரி, விர்ஜின், எப்ரசியா மேரி, ஜெசிந்தா ஆரோக்கிய மேரி - திருச்சி, அமிர்த ராணி,கலிஸ்டா மேரி, -திண்டுக்கல், மேரி மௌரிஸ் - தஞ்சாவூர், மார்சலோசா மேரி, லோரா மேரி, ஆக்னஸ் ரோசாள் - தூத்துக்குடி, ஜெய சேகரி - கொடைக்கானல், சிரில், சகாயம் - கடலூர், ஆக்னஸ், அருள் மேரி, லூக்காஸ் மேரி,எலிசபெத் மரியா, செசிலி, அனன்சியா மேரி, பிலோமினாள், டோம்னா மேரி, ஜார்லத் புஷ்பா, டோன்போஸ்கோ மேரி, டோனெட்டல்லா அனஸ்தாசியாள் - கும்பகோணம், சலேத் மேரி - திருப்பூர், புஷ்பா மேரி - காரைக்குடி, வித்யா மேரி, பிரேமா - திருநெல்வேலி, செலின், சின்னராணி - விழுப்புரம்,லில்லி இஸபெல்லா மேரி- மதுரை,ரூபி மேரி - கரூர், புஷ்பம் - சிந்தாமணி, அருன் சீலி - முட்டம்

**பொதுநிலையினர்**

பிரான்சிஸ் பேசில், G.S.பாத்திமா, ஜான் ஜோசப், ஆனி பீட்டர் ராஜ், லீமா தெரஸ், கிளாரா லூர்து மேரி, அனிருத் ஜோஸ்வா, இமாக்குலேட் சோபியா, லூதியா மேரி, ஞான சேகரன் - திருச்சி; அல்போன்சா ஜோதி மேரி, மார்கிரேட் பெல்சியா, லீலாவதி, அமல செல்வி, இருதய விஜிலா – திண்டுக்கல்; மேரி - இளையரசனேந்தல்; சிப்ரியான் - தெளி; ததேயுஸ் கரோலின் - திருப்பூர், மைக்கேல்சாமி, புஷ்பக்கண்ணு - கோயம்பத்தூர். ராணி, பிரேமா மோரிஸ், வியாகுல மேரி - சென்னை

## குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்

**அருட்சகோதரி. மேரி மௌரிஸ் FBS- தஞ்சாவூர்**

**திரு. மிக்கேல் சாமி - கோயம்பத்தூர்**

Owned and Published by THE ORDER OF SERVANTS OF MARY from Jyothi Matha Alayam. 5/301 Matha Koil Street, Rajiv Gandhi Road, Okkiampet, Chennai – 600 097 and Printed by M. RAJA REGAN at Devan Press, Old No.138/1, New No.158/1, Venkatachala Mudali Street, Royapettah, Chennai – 600 014.
Editor: Fr. R.M. UGIN WINNER OSM.







# வாக்கு

## பதிப்பாசிரியர் பக்கம்

**ரு.ம. யூஜின் வின்னர் ம.ஊ.ச**


மனிதனின் உண்மைத்தனத்தையும் நேர்மையையும் அளவிடும் கருவிதான் வாக்கு. வாக்கு தவறாத மனிதர்கள் வாழ்க்கையிலும் தவறிச்செல்வதில்லை. இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு அன்னை மரியாள். கபிரியேல் தூதர் மரியாளுக்கு சொன்ன வாக்கு எந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததோ அதுபோல அன்னை மரியாள் கபிரியேல் தூதருக்கு சொன்ன வாக்கும் முக்கியத்துவம் வாய்ந்தது.

கபிரியேல் தூதர் மரியாளுக்கு சொன்ன வாக்குகள் அன்னையை பெருமைப்படுத்தும் வாக்குகள். ஆனால் மரியாள் கபிரியேல் தூதருக்கு சொன்ன வார்த்தைகள் அன்னையின் தாழ்ச்சியின் வார்த்தைகள். கடவுள் அன்னை மரியாளுக்கு இந்த பெருமைமிகுந்த வாக்குகளைச் சொல்ல பல ஆயிரம் வருடங்கள் காத்திருந்தார். அருள்மிகப் பெற்றவரே வாழ்க என்ற வார்த்தையானது எல்லோருக்கும் கிடைக்கும் பாக்கியம் கிடையாது.

இந்த வாக்கினைச் சொல்ல கடவுள் பல ஆயிரம் வருடங்கள் தயாரிப்பினை மேற்கொண்டார். அந்த தயாரிப்பின் நிறைவுதான் அன்னை மரியாள். இவர் அருள் மிகுந்தவர். காரணம், ஆண்டவர் அவரோடு இருக்கின்றார். அன்னை மரியாள் சிறுவயது முதல் கடவுளுக்கு உகந்த வாழ்க்கை வாழ்ந்திருக்கின்றார். அவர் வாழ்ந்த வாழ்க்கைக்கு கடவுள் கொடுத்த பரிசுதான் இந்த வாக்கு.



## உள்ளே



கதையினில் கலந்த மரியா - 05
பாஸ்கா மகிழ்ச்சியில் மரியாவின் பங்கேற்பு-06
அன்னையின் திருத்தலங்களை நோக்கி - 09
விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி - 14
பார்புகழ் பாத்திமா அன்னை வரலாறு - 16
ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன் - 17
மரியின் ஊழியர்சபையின் புனிதம் - 24
மரியா - கடவுளின் கடிதம் - 25
பொதுநிலையினரின் பார்வையில் மரியா - 28
உடைவோம் உருமாறுவோம் உயிர்ப்போம் - 30
ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி - 32

தந்தைக் கடவுளின் ஒரே மகன் அன்னை மரியாள் மூலம்தான் பிறக்கப் போகின்றார் என்ற வாக்கானது அன்னை மரியாளுக்கு கொடுத்த மிகச்சிறந்த பரிசு. இந்தப் பரிசானது எந்த அளவுக்கு முக்கியமான ஒன்று என்று அன்னை மரியாளுக்கு கபிரியேல் தூதர் விளக்குகின்றார். இந்த வாக்கானது அன்னை மரியாளிடம் இருந்த எல்லாவிதமான தயக்கங்களையும் சந்தேகங்களையும் தீர்த்து வைத்தது.

ஆனால் அன்னை மரியாள் கொடுத்த வாக்கானது வரலாற்று சிறப்புமிக்க வாக்காக மாறுகின்றது. உலக வரலாற்றை இரண்டாகப் பிரித்த வாக்காக மாறுகின்றது. உலகின் மீட்பர் ஆண்டவர் இயேசுவை உலகிற்கு அறிமுகப்படுத்தும் வாக்காக மாறுகின்றது. "நான் ஆண்டவரின் அடிமை உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" என்ற வாக்கானது அன்னை மரியாள் தன்னையே முழுவதும் கடவுளுக்கு அர்ப்பணிக்கும் வாக்காக மாறுகின்றது.

இந்த வாக்கானது தன் வாழ்நாளின் இறுதிவரை அன்னை மரியாளால் காப்பற்றப்பட்டது. அன்னை மரியாள் கடவுளுக்கு புகழ்ச்சியின் வாக்கை காணிக்கையாக்குகின்றார். இந்த வாக்கானது அன்னை மரியாள் கடவுள்மீது கொண்டிருக்கும் மதிப்பையும் பற்றையும் பற்றிப் பேசுகின்றது. அன்னை மரியாள் கொடுத்த வாக்கிலே சிறந்த வாக்கு என்பது கானாவூர் திருமணத்தில் தன் மகனை முதல் அரும்அடையாளத்தை செய்ய வைத்த பெருமைதான். "அவர் சொல்வதையெல்லாம் செய்யுங்கள்" என்ற வாக்கானது பணியாளர்களுக்கு கொடுக்கப்பட்ட வாக்கு மட்டுமல்ல. மாறாக திருமண வீட்டாருக்கும் அவர்களோடு சேர்ந்து உலக மக்கள் அனைவருக்கும் கொடுக்கப்பட்ட வாக்கு.

ஆம், யாரெல்லாம் ஆண்டவர் இயேசுவின் வார்த்தைகளுக்கு கீழ்ப்படிகின்றார்களோ அவர்கள் அனைவரும் வாழ்வு பெறுவார்கள். அதுவும் நிலைவாழ்வு மற்றும் புதுவாழ்வு பெறுவார்கள். இது பலரின் வாழ்க்கையில் சாத்தியமானது. சக்கேயுவே நீ இறங்கி வா என்ற இயேசுவின் வார்த்தையைக் கேட்டு சக்கேயு கீழ்ப்படிந்தார். சக்கேயுவின் வாழ்க்கையானது புதுவிதமாக மாறியது. அதேபோல் இயேசு தன்னுடைய சீடர்களைத் தேர்ந்தெடுக்கும்போது அவர்களை அழைத்தவுடன் அவர்களும் கீழ்ப்படிந்தனர். உடனே அவர்களின் வாழ்க்கையானது புதுவிதமாக மாறியது.

ஆனால் பணியாளர்கள் ஆண்டவர் இயேசுவின் வார்த்தைக்கு கீழ்ப்படியுமுன் அன்னை மரியாளின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தனர். அதற்கு கிடைத்த வெகுமதிதான் ஆண்டவர் இயேசு செய்த முதல் அற்புதம். அன்னை மரியாளின் பரிந்துரை என்னும் வாக்கு மனிதர்களாகிய நமக்கு மிகவும் அவசியப்படுகின்ற ஒன்றாக இருக்கின்றது. வாக்கு என்னும் இயேசுவை உலகிற்கு அறிமுகம் செய்த அந்த வாக்கினை தன் வயிற்றில் சுமந்த அன்னையின் வாக்கு எத்தனை மேன்மைக்குரியது.

**வாக்கு வாழ்வு கொடுத்தது.**
**அதுவும் நிலைவாழ்வைக் கொடுத்தது.**





**திருச்சி – விக்டோரியா**

எனக்கு மூல வியாதியால் கடுமையாக உடல் வலி ஏற்பட்டது. மாதாவிடம் ஜெபம் செய்தேன் நற்சுகம் கிடத்தது. அதேபோன்று என் மருமகளுக்கு குழந்தை வரம் கொடுக்க மாதாவிடம் ஜெபம் செய்தேன். மழலை வரம் தந்த அன்னைக்கு நன்றி. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**ஜென்ஸி - சோழிங்கநல்லூர்**

எனக்கு வேலை கொடுக்கவேண்டி மாதாவிடம் ஜெபம் செய்தேன். மாதா எனக்கு நல்ல வேலை கொடுத்தார்கள். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**ஜோஸ்பின் - சோழிங்கநல்லூர்**

என் மகளுக்கு திருமணம் தள்ளிப்போனது. நான் மாதாவிடம் விண்ணப்பம் செய்தேன். திருமண ஒப்பந்தத்தை நிறைவேற்றி தந்த மாதாவிற்கு நன்றி. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**பாத்திமா – சோழிங்கநல்லூர்**

எனக்கு பார்வை சரியில்லாமலிருந்தது. நான் மருத்துவமனைக்கு சென்று பரிசோனை செய்தேன். கண்களில் புரையில்லை. நரம்புகளில் ரத்தக் கசிவு இருக்கின்றது. அதனால் ஊசி போட சொன்னார்கள். நான் பார்வை கிடைக்க வேண்டி மாதாவிடம் ஜெபம் செய்தேன். பார்வை வரம் கொடுத்த மாதாவிற்கு நன்றி. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

என் மகனுக்கு இடம் வாங்க முன்பணம் கொடுத்திருந்தோம். ஆனால் அந்த இடத்தை வாங்குவதற்கு முடியாமல் பணத்தடை அதிகமாக இருந்தது. மூன்று மாதம் தவணை கொடுத்தார்கள். நான் மாதாவிடம் உமக்கு சித்தமானால் எனக்கு அந்த இடம் கிடைக்க வேண்டும் என்று ஜெபம் செய்தேன். 4 மாதங்கள் கழித்து அந்த இடத்தை வாங்க அருள்புரிந்த அன்னைக்கு கோடான கோடி நன்றி. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**செலின் நெப்போலியன் - சோழிங்கநல்லூர்**

எனக்கு கடந்த 3 வருடங்களாக தூக்கமின்மை மனம் படபடவென்று துடிக்கும் மரணபயம் என்னை ஆட்கொண்டது. நான் மாதாவிடம் மனமுருக மன்றாடினேன். மாதம் மாதம் ஜெபம் செய்வேன் எனக்கு நல்ல தூக்கம் மற்றும் நற்சுகம் கொடுத்த மாதாவிற்கு நன்றி. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

என் அக்காவிற்கு திருமணம் முடிந்து 3 வருடங்கள் குழந்தை இல்லை. அவர்களுக்காக நான் மாதாவிடம் மாதம் மாதம் ஜெபம் செய்தேன். என் ஜெபத்தைக் கேட்டு என் அக்காவிற்கு ஆண் குழந்தை கொடுத்த அன்னைக்கு நன்றி. எனக்கு உடல்நிலை சரியில்லை. மேலும் கடன் பிரச்சனை அதிகமாக இருந்தது. நான் மாதாவிடம் மன்றாடினேன். எனக்கு நற்சுகம் தந்து கடன் பிரச்சனையையும் தீர்த்து வைத்த அம்மாவிற்கு நன்றி. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!



# ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி

திருமதி. மேரி ஜீவா
சோழிங்கநல்லூர், சென்னை

மார்ச் மாதம் 4 ஆம் தேதி மாதத்தின் முதல் சனிக்கிழமை. ஜீவ மாதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட நாள். பக்தர்கள் கூட்டம் சற்று அதிகமாகவே காணப்பட்டது. வந்திருந்த அனைத்து மக்களும் பக்தியோடு செபமாலை, குணமளிக்கும் நற்கருணை ஆராதனை, சாட்சியப் பகிர்வு, திருப்பலி என்று அனைத்து திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு இறையாசியை அன்னையின் பரிந்துரை வழியாக வேண்டினர். மேலும் அவர்கள் கூறிய சாட்சியங்கள் பலரது வாழ்வில் நம்பிக்கை ஒளியை பிரகாசிக்க வைத்திருக்கின்றது. அந்த சாட்சியப் பகிர்வுகள் இதோ உங்களுக்காக:

**சுதா – மடிப்பாக்கம்**

என் வீட்டுக்கு அருகில் இருக்கும் சகோதரியின் மகளுக்கு திருமணம் முடிந்து இரண்டு வருடங்களாக குழந்தை இல்லை. அவர்கள் என்னிடம் கூறினார்கள். நான் ஜீவமாதாவிடம் ஜெபம் செய்து வாருங்கள், குழந்தை வரம் தருவார்கள் என்று கூறி அவர்களுக்காக நானும் அன்னையிடம் மனமுருக வேண்டினேன். மாதாவின் அருளால் அவர்களுக்கு குழந்தை வரம் கிடைத்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**மினி – சோழிங்கநல்லூர்**

நான் செப்டம்பர் மாதம் நண்பர்களோடு வேலைக்குப் போனேன். ஒவ்வொரு மாதமும் மாதாவிடம் ஜெபம் செய்துவிட்டு போவேன் வேலைக்காக. என் நண்பர்களுக்கு வேலை கிடைத்தது. எனக்கு வேலை பற்றிய எந்த முடிவும் கிடைக்கவில்லை. நான் மாதாவிடம் மனமுடைந்து ஜெபித்தேன். நான் நினைத்தும் பார்க்கமுடியாத அளவுக்கு நல்ல வேலையும் சம்பளமும் கிடைத்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

எங்கள் அண்ணனுக்கு முட்டி வலி. வேதனையாக இருந்தது. மருத்துவமனைக்கு சென்றபோது MRI Scan எடுக்க சொன்னார்கள். நான் மாதாவிடம் எங்கள் அண்ணனுக்காக ஜெபம் செய்தேன். அதேபோல் எங்கள் அண்ணனுக்கு நற்சுகம் தந்த மாதாவிற்கு நன்றி. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**ஜானி அலெக்ஸாண்டர் - மேடவாக்கம்**

எனக்கு 2019-ல் திருமணம் நடந்தது. கரு உண்டாகி இரண்டு அபார்ஷன் ஆனது. மனமுடைந்து போனேன். மாதாவிடம் நம்பிக்கையோடு ஜெபித்தேன். வளையல் வாங்கி சென்றேன். மாதாவின் அருளால் மழலை வரம் கிடைத்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்!





# கதையினில் கலந்த மரியா

அருள்பணி. ஆன்றனி ஷாஜி ம.ஊ.ச



ஒரு முறை மலை வாழ் மனிதர்கள் சிலர் பெரிய மாநகரத்திற்கு வந்தார்கள். நகர வாழ மக்களின் வாழ்வு முறையைப் பார்த்து வியந்தார்கள். மாநகரத்தில் பெரிய பெரிய கட்டிடங்களையும், பூங்காக்களையும் ஓடிஓடி சென்று பார்த்து வியந்தனர். ஒரு கட்டத்தில் வெயிலின் தாக்குதலால் மிகவும் சோர்வடைந்தனர். ஆகவே குடிப்பதற்கு தண்ணீர் தேடி அலைந்தனர். அப்போது அருகில் சென்று குழாயை திறந்து பார்த்தனர், தண்ணீர் வந்தது. அவர்களுக்கு ஆச்சரியம், மீண்டும் மீண்டும் குழாயைத் திறந்து மூடினர். ஆறுகளிலும், ஏரிகளிலும் மட்டுமே தண்ணீரைப் பார்த்தவர்களுக்கு குழாயில் தண்ணீர் வருவது அதிசயமாக இருந்தது. தண்ணீர் பருகி விட்டு அங்கிருந்து அகன்றனர். இரவு நேரத்தில் அனைவரும் தூங்கிய பிறகு வந்து அந்த குழாயை உடைத்து எடுத்துக் கொண்டு சென்றனர். தங்களுடைய மலைக்கிராமத்திற்கு எடுத்துச் சென்று அங்கு ஒரு சுவற்றைக் கட்டி அதில் வைத்தார்கள். ஊர் மக்கள் அனைவரையும் கூப்பிட்டு, இனிமேல் ஆறுகளிலும் ஏரியிலும் சென்று குடிநீர் எடுக்கத் தேவையில்லை. இந்த குழாயைத் திறந்தால் தண்ணீர் வரும் என்று கூறினார்கள். ஊரார் அனைவரும் மகிழ்ச்சியோடு திரண்டார்கள். ஊர்த்தலைவரைக் கூப்பிட்டு குழாயை முதன் முதலாக திறக்கக் கூறினார்கள். ஊர்த்தலைவர் குழாயைத் திறந்தபோது தண்ணீர் வரவில்லை. திரும்ப திரும்ப குழாயை திறந்து பார்த்தனர். தண்ணீர் வரவில்லை. குழாயை உடைத்தும் பார்த்தனர் அப்போதும் தண்ணீர் வரவில்லை. தண்ணீர் தொட்டியோடு குழாய் இணைந்து இருக்கும்போதுதான் தண்ணீர் வரும் என்பது அவர்களுக்கு தெரியாமல் போனது. **யோவான் 15:4** “நான் உங்களோடு இணைந்து இருப்பதுபோல நீங்களும் என்னோடு இணைந்து இருங்கள் , கொடி திராட்சை செடியோடு இணைந்து இருந்தாலன்றி தானாக கனிதர இயலாது. இறைவனின் அன்பு, ஆதரவு, கனிவு, பிரமாணிக்கம் ஆகியவற்றின் கலவைதான் “அருள்” இறைவன் மரியாளை அருளால் நிரப்பியது இறைவனின் அன்பின் வெளிப்பாடு. இறைவனோடு இறைதிட்டத்தில் மரியாள் தொடர்ந்து பயணிக்க இருக்கிறார் என்பதன் அடையாளம்தான் “அருள் மிகப் பெற்றவரே வாழ்க” என்று வானதூதர் வாழ்த்தியது. மூவொரு கடவுளிடமிருந்து ஊற்றெடுக்கின்ற அருள் அன்னை மரியாவிடம் நிரம்பி வழிகின்றது. நாம் அன்னை மரியாவோடு இணைந்து இருக்கின்றபோது நம்முடைய வாழ்விலும் இறைவனின் அருள் கரைபுரண்டு ஓடும். அன்னையைப் போல் இறைவார்த்தையை உள்ளத்தில் தியானித்து இறைவனோடு இணைந்திருப்போம். இறைவனின் அருள் நம்முடைய வாழ்வில் நிறைவாக தங்குவதாக.

# பாஸ்கா மகிழ்ச்சியில் மரியாவின் பங்கேற்பு

அருள்சகோதரி. டெக்லா ம.ஊ.ச.,
செர்வைட் தலைமையகம், சென்னை.

## தொடக்கவுரை

இறைமகன் இயேசு இவ்வுலகில் ஒரு குழந்தையாய் பிறக்க, சிலுவை மரணம் வழியாக இந்த உலகை மீட்க முதற்காரணமாக இருந்தவர் நமது அன்னை மரியா. முப்பது ஆண்டுகள் அவரைக் கண்ணும் கருத்துமாய், ஞானத்திலும் அறிவிலும் வளர்த்து இறைவனுக்கும் மனிதனுக்கும் பிரியமுள்ள ஒரு மகனாக உருவாக்கிய பெருமை அவரையே சாரும். மனிதன் இவ்வாறுதான் வாழ வேண்டும் மனித மாண்பையும் மனித நேயத்தையும்தான் மானுடம் முதலில் தூக்கிப் பிடிக்க வேண்டும் என்ற முழக்கத்துடன் இயேசு தனது பணி வாழ்வைத் தொடங்க, அவர் முழு மனித வாழ்வு வாழ ஊக்கம் அளித்தவர் நமது அன்னை. ஆனால் இந்த வித்தியாசமான இறை - மனிதரை பின்பற்ற மறுத்துவிட்ட அதிகாரக் கும்பல், பொறாமைத் தீயால் பற்றியெரிந்து, அவரை ஒழிக்கத் திட்டமிட்டது. குற்றவாளிக்குரிய சிலுவைத் தண்டனையை அவருக்கு பரிசாகக் கொடுத்தது. ஆனால் நீதியும், நேர்மையும், உண்மையும் வெற்றி பெறும் என்பதைப் பாஸ்காப் பெருவிழா எண்பிக்கின்றது. இயேசுவின் உயிர்ப்பு அனுபவத்தை, கல்லறைக்குச் சென்ற பெண், ஆண் சீடர்கள் முதலில் பெற்றனர். அன்னை மரியாவுக்கும் இந்த அனுபவம் கிடைத்திருக்கும் என்ற ஒரு நம்பிக்கை தொடக்க காலத்திலிருந்தே கத்தோலிக்க மக்களிடையே நிலவி வருகிறது. தனது மகனின் பாடுகளில் முழுமையாகப் பங்கேற்ற தாய் மரியாவுக்கு, தனது உயிர்ப்பின் மாட்சியை இயேசு முதலில் வெளிப்படுத்தியிருப்பார் என்பது ஒரு எதார்த்தமானதே. இதைப்பற்றிய சிந்தனைகளை இக்கட்டுரையில் ஆராய்வோம்.


## மீட்பரின் தாய் மரியா

மங்கள வார்த்தை நிகழ்வின்போதே தம்மிடம் பிறக்கவிருக்கும் இறைமகன் இயேசு, உலகின் பாவங்களைப் போக்கும் மீட்பர் என்ற செய்தி மரியாவுக்குத் தரப்பட்டது. நாற்பதாம் நாள் குழந்தை இயேசுவை கோவிலுக்கு காணிக்கையாக ஏந்திச்சென்றபோது சிமியோன் இறைவாக்கினர் "இதோ இக்குழந்தை இஸ்ரயேல் மக்கள் பலரின் வீழ்ச்சிக்கும் எழுச்சிக்கும் காரணமாக இருக்கும் எதிர்க்கப்படும் அடையாளமாகவும் இருக்கும்" என்று கூறி வானதூதரின் வாழ்த்துரையை உறுதிப்படுத்தினார். மேலும், எசாயா இறைவாக்கினர் முன்னறிவித்த துன்புறும் ஊழியனின் வாழ்வையும் மரியின் நினைவுக்கு கொண்டு வருகின்றார். இம்மகனோடு அவரது அன்னையும், துன்பங்களையும் வேதனைகளையும் அனுபவிக்க வேண்டுமென்பதை "உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவிப் பாயும்" என்று கூறுகிறார். இயேசுவின் குழந்தைப் பருவத்திலும், பொது வாழ்வின் போதும் அன்னை தன் மகனோடு பயணித்தார். எதிர்ப்பும், போராட்டமும் நிறைந்த சூழலில்





முட்டை உடைந்து குஞ்சு பிறக்கிறது
விதை உடைந்து செடியாகிறது
தலைப்பிரட்டையின் மாற்றம் தவளையாகிறது
கூட்டுப்புழு உருமாறி பட்டுப்பூச்சியாகிறது
தாயின் தியாகம் குழந்தையாகிறது
அண்ணலே உம்மைப்போல் யாமும்
உடைந்திட வேண்டும் உயிர்த்திட வேண்டும்
சாதி சமய வேற்றுமை நீங்க – எம்
பேராசை பிறரைச் சுரண்டாதிருக்க
சுயநலமில்லாப் பகிர்வினைக் கொள்ள
மனித நேயத்தை மாண்புடன் பேண
குடும்ப அன்பின் கோபுரம் உயர
அன்போடு பிறரை மன்னித்து வாழ
முதுமை, வறுமை, நோயினில் உழல்வோர்
துன்பம் நீக்கித் துணைநின்றுதவ
தீவிரவாதம் வேரோடு ஒழிய
சுற்றுச் சுழல் தூய்மையைக் காக்க
தன்னலமில்லாத் தலைவர்கள் ஆக
யாமும் உம்போல் ….,
உடைந்திட வேண்டும்
உருமாற வேண்டும்
உயிர்த்திட வேண்டும்
உமதருளோடு




ஆகட்டும் இதழின் முன்னாள் எழுத்தாளரான அருட்சகோதரியின் மறைவுக்கு ஆகட்டும் குழுமம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கின்றது.

**சந்தா செலுத்துபவர்கள், மணியார்டர் மூலமாகவோ, வங்கி கணக்கு மூலமாகவோ, Google Pay மூலமகாவோ செலுத்தலாம். தகவல்கள் இரண்டாம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. Google Pay மூலம் பணம் செலுத்துபவர்கள் உங்கள் முகவரியை 8122795035 என்ற எண்ணுக்கு வாட்ஸ் அப் குறுஞ்செய்தியாக அல்லது சாதாரண குறுஞ்செய்தியாக அனுப்ப கேட்டுக் கொள்கின்றோம்**

# உடைவோம்-உருமாறுவோம் உயிர்ப்போம்

திருமதி. ஃபிலோம்மா, திருச்சி.

அம்மையும் அப்பனும் ஆனஎம் இறைவா
அளவில்லாத நும் அன்பதனாலே
மனுக்குலம் படைத்தாய் மனுவுரு எடுத்தாய்
ஆவலாய் எம்மைத் தேடியே வந்தாய்
உலகின் பாவம் போக்கியே உந்தன்
பாதங்கள் சேர்க்கப் பரிவுடன் வந்தாய்
உம் மக்கள் நாங்கள் வாழ்வாங்கு வாழ
உம் உடலையே பிட்டு நற்கருணையில் தந்தாய்
பாரச் சிலுவையைத் தாங்கியே நடந்தாய்
கடுந்துயருற்றுக் கல்வாரி சேர்ந்தாய்
கொடிய யூதர் உமைச் சிலுவையில் அறைந்து
கொன்றார் எமக்காய் உம் இன்னுயிர் ஈந்தாய்
அன்பின் உச்சம் இதுவெனக் கண்டோம்
கல்லறை தனிலே உம் உடலை வைத்தனர்
கல்லால் அந்தக் கல்லறை மூடினர்
நீர் உயிர்த்துமே எழுவீர் என மிக அஞ்சி
கல்லறை மீது முத்திரை இட்டனர்
காவலும் வைத்தனர்
ஆயிரம் கைகள் மறைத்து நின்றாலும் ஆதவன் மறைவதில்லை
ஆணையிட்டே தடுத்தாலும் அயல்கடல் ஓய்வதில்லை
கல்லும் காவலும் புல்லாயின உம் உயிர்ப்பால்
இயேசுவே
உயிர்த்தெழுந்தீர் நீரென நம்பிடாத சீடரோடு
வழிப்பயணம் செய்தபோதும்
விழிப்புணர்வை அச்சீடர் அடையவில்லை
அப்பத்தைப் பிட்கையிலே
அவர் கண்டார் உம் உருவை
பூட்டியுள்ள அறைதனிலே சீடருக்கு உமைக் காட்டி
நம்பாத தோமையினை நீர் அழைத்து
நும்காயத்தில் கைவிட்டுப் பார்க்கச் சொன்னீர்
சீடர்மேல் நீர் கொண்ட பரிவன்பால்
மீன்களைச் சமைத்து வைத்து
அவருண்ணத் தந்தீர்நீர் கடற்கரையில்
உயிர்த்தபின் இவ்வாறு மூன்றுமுறை தோன்றிநின்றீர்
உடைந்தீர் - உயித்தெழுந்தீர் - உயிர் பெற்று யாம் வாழ





இயேசு வளர்ந்து வந்தார். மரியா, தாய் என்ற இடத்திலிருந்து சீடத்தி என்ற நிலைக்கு இடம் பெயர்ந்தாலும், இரண்டும் இதமாக அவரில் இணைந்து செயல்பட்டதை அவர் வாழ்வில் உணர்கின்றோம். தனது மகனை, பேய் பிடித்தவன், போசனப்பிரியன், மதி மயங்கியவன் என்றெல்லாம் பரிசேயரும் சதுசேயரும் கூறக் கேட்டவர் மரியா. ஆயினும் இறைவனின் திருவுளம் இவ்வாறு நிறைவேற வேண்டும், மீட்பின் திட்டத்தில் இயேசுவின் பாடுகளுடன் அன்னையின் வியாகுலங்களும் பிணைந்து இருக்கின்றன என்பதை முழுமையாக நம்பினார். எனவே கல்வாரிக்கு துணிந்து பயணம் மேற்கொண்டார். சிலுவை அடியில் வேதனைகளின் உச்சகட்டத்தில் விண்ணுக்கும் மண்ணுக்குமிடையே சிலுவையில் தொங்கியவாறே தன் அன்பு மகனின் உயிர் ஊசலாடும் தருணத்தில் திரு அவையின் மக்களுக்குத் தாயாகும் பேற்றினைப் பெற்றார். வியாகுல அன்னையும் தனது இதயத்தில் கல்வாரிப்பீடம் அமைத்து அதில் தன்னை தகனப்பலியாக நிவேதனம் செய்தார். இந்த மீட்பரின், உயிர்த்த் தரிசனத்தை மரியா முதலில் பெற்றிருப்பார் என்று திருச்சபையில் ஒரு மரபு இருந்து வருகிறது.

**வரலாற்றின் மரபில் வளர்ச்சி**

புனித இரண்டாம் அருள் சின்னப்பர் கூறுகிறார்: ‘‘நாசரேத்தூரில் மங்கள வார்த்தையின்போது தொடங்கிய மரியாவின் பணி கிறிஸ்துவின் உயிர்ப்பில் அவர் ஆற்றிய பங்கோடு நிறைவுறுகிறது’’. ஆம், சிலுவை மரணம் இன்றி உயிர்ப்பில்லை. இயேசுவின் பிறப்பு இன்றி, இறப்பு இல்லை. எனவே இயேசுவின் பிறப்பு, வாழ்வு, சிலுவை மரணம் ஆகிய மறைநிகழ்வுகளில் தனது பங்கினை, பணியினை சிறப்பாக செயல்படுத்திய ஒரு அன்னைக்கு அவரது அன்பு மகன் இயேசு தனது உயிர்ப்பு அனுபவத்தைப் பரிசாக அளித்திருப்பார் என இறை மக்கள் நம்புவது இயற்கையும் இயல்பும் ஆகும்.

நான்காம் நூற்றாண்டில் மிலான் நகரில் ஆயராகப் பணி புரிந்த புனித அம்புரோஸ் கூறுகிறார்: ‘‘மரியா தனது அன்பு மகனின் உயிர்ப்பின் தரிசனத்தைப் பெற்றார். அந்த ஒப்பற்ற நிகழ்வை நம்பிய முதல் நபரும் அவரே’’. நற்செய்தி இந்நிகழ்வைப் பதிவு செய்யவில்லை என்பது தெளிவு. ஆனால் இதற்கு வெளியே பல இறையடியார்களும் புனிதர்களும் மரியாவின் இந்த அனுபவம் பற்றிய கருத்துக்களை வழங்கி வருகின்றனர். புனித லொயோலா இஞ்ஞாசியார் தமது ஆன்மீகப் பயிற்சிகளில் இதைப் பற்றி குறிப்பிடுகிறார். ஒரு மாத தியான பயிற்சிகளை நான்கு வாரங்களாகப் பிரித்து, நான்காவது வாரத்தில் இயேசு மரியாவுக்கு வழங்கும் உயிர்ப்பு அனுபவத்தை தியானிக்க நம்மை அழைக்கின்றார்.

புனித இஞ்ஞாசியார் எருசலேமுக்குப் புனித பயணம் மேற்கொண்ட போது சேப்பல் ஆ.்.ப் அவர் லேடி என்ற கோவிலை சந்தித்துள்ளார். அந்த இடத்தில்தான், இயேசு தனது உயிர்ப்பின் மாட்சியை அன்னை மரியாவுக்கு வழங்கினார் என்று நம்பப்படுகிறது. தற்சமயம் அந்த இடமே ஒரு கோவிலாக மாற்றப்பட்டுள்ளது. சேசு சபை முன்னாள் சபைத் தலைவர் கோல்வன்பக், மிகுந்த பக்தியுடன் இக்கோவிலை தரிசித்ததாக அவர் வரலாறு கூறுகிறது. புனித இஞ்ஞாசியாரின் ஒரு மாத காலத் தியானத்தில் இயேசு, தமது அன்னை மரியாவுக்கு காட்சி கொடுத்ததை மரியா பெற்ற மங்கள வார்த்தை

நிகழ்வோடு ஒப்பிடுகின்றார். மரியா வழியாக மீட்பின் திட்டம் நிறைவேறுகிறது. மூவொரு இறைவனிடமிருந்து மரியா முழுமையாக அருளைப் பெறுகின்றார். மரியா துன்பங்களை அனுபவித்ததினால் அவருக்கு உயிர்ப்பு நிகழ்வு ஆறுதலாக அமைந்தது என்று நாம் நினைக்கக் கூடாது. மாறாக, பாஸ்காவின் நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பு ஆகிய அனைத்தையும் உயிர்ப்பின் அனுபவம் மரியாவுக்கு வழங்கியது. இயேசுவின் ஆவியிலிருந்து வாழ்வு ஊற்றெடுக்கிறது. மரியன்னையின் வேதனை, துன்பங்களில் கிறிஸ்துவின் ஒளி ஒளிர்கின்றது. இத்தகைய சிந்தனைகளை, புனித இஞ்ஞாசியார், காலில் குண்டடிபட்டு பம்பலோனியாவில் கிறிஸ்துவின் வாழ்வு என்னும் நூலைப் படிக்கும்போது பெற்றதாக அவர் வரலாறு கூறுகின்றது. இவருடைய ஆன்மீகப் பயிற்சிகளில், மரியா, உயிர்த்த இயேசுவைப் பார்ப்பது ஒரு காட்சித்தியானமாக அமைகின்றது. மரியா வீட்டில் அமர்ந்து இறை வார்த்தையைப் படிப்பதுபோலும், மகனைக் கண்டதும் இரு கரங்களை உயர்த்துவதுபோலவும் தனது மகனின் உயிர்ப்பை எதிர்பார்த்து செபமனநிலையில் இருக்கும் சூழலில் நம்மை உட்படுத்தி, நாமும் அந்த அனுபவத்தைப் பெற இப்புனிதர் நம்மை அழைக்கிறார்.

**மரியாவின் பாஸ்கா அனுபவம்**

உயிர்த்த இயேசுவின் அனுபவம் பெற்ற சீடர்கள் அவர் விட்டுச்சென்ற நற்செய்தி பரப்பும் பணியை ஆர்வமுடன் ஆற்ற அதற்காக தங்கள் உயிரையும் கொடுக்க ஆற்றல் பெற்றனர். உங்களுக்கு அமைதி உண்டாகுக என்ற மாபெரும் நற்செய்தியை உயிர்ப்பு அனுபவம் பெற்ற அனைவருக்கும் வழங்கினார் இயேசு. எம்மாவு சீடர்கள் கவலையினால் நம்பிக்கை இழந்து வாடி நின்ற வேளையில் உயிர்த்த இயேசுவின் வார்த்தைகளும், அப்பம் பிடுதல் நிகழ்வும் அவர்களின் அகக் கண்களைத் திறந்தன. விவரிக்க முடியாத மகிழ்ச்சியுடன் திருத்தூது அறிவிக்கும் பணியைத் தொடர்ந்திட புறப்பட்டனர். மரிய மதலேன், தோமையார் இவர்களின் அனுபவமும் உயிர்த்த ஆண்டவரை நெருக்கமாகப் பின்பற்றத் தூண்டியது. மரியாவின் செயல்பாடுகள் சிலுவையில் நின்றதோடு அறிய வருகின்றோம். அதன்பின் பெந்தேகோஸ்து பெருவிழாவில் தூய ஆவியானவரைப் பெறுமுன் திருத்தூதர்கள் மத்தியில் இறை வேண்டலில் ஈடுபட்டிருப்பதைக் காண்கிறோம். இரண்டு நிகழ்வுகளுக்குமிடையில் மரியா உயர்த்த இயேசுவை சந்தித்திருக்க வேண்டும். அதன் வெளிப்பாடே சீடர்களை ஒன்றிணைத்தது. ஆதித்திருச்சபையில் தொடக்கத்தில் தனது பங்களிப்பை அளிக்க அவரை உந்தித் தள்ளியது. தூய ஆவியார், எருசலேம் மாடி அறையில் கூடியிருந்தோர் மீது இறங்கியபோது மரியா, திருஅவையின் அன்னையாக அவர்கள் மத்தியில் வீற்றிருப்பதைக் காண்கிறோம். இயேசுவின் கட்டளையை ஏற்று அவர் விண்ணகம் சென்றபின் துய ஆவியார் பொழியப்படும் வரை அனைவரையும் செபத்தில் இணைத்தார் மரியா. திருத்தூதர்களோடு இணைந்து அவரும் ஆவியானவரின் அருள் பொழிவைப் பெற்றவர். எனவே நற்செய்தி அறிவிக்கும் பணியில் தன்னை ஈடுபடுத்தியிருக்க வேண்டும். உயிர்த்த இயேசுவை நம்பிய முதல் கிறிஸ்தவர்கள் ஒன்றாக இறைவார்த்தையை கேட்பதிலும், ஒருமனத்தவராய் செபிப்பதிலும், அப்பம் பிடுவதிலும் ஓரே உள்ளத்தவராய் இருந்த அந்த இறையாட்சிக் குழுமங்களை அன்னை

........23 ஆம் பக்கம் பார்க்க



ஆகட்டும்



துறந்தவன் என்ற அடையாளத்தை காவி உடை நமக்கு அறிவுறுத்துகிறது ஆகவே மரியன்னையை பக்தர்கள் தங்களின் எளிமையை காட்டுவதற்காக காவி உடை அணிந்து மரியன்னையிடம் பக்தியுடன் ஜெபிக்கிறார்கள்.

சில பக்தர்கள் மரியன்னைக்காக தங்கள் தலை முடியை காணிக்கை செலுத்தி தங்கள் பக்தியை வெளிப்படுத்த வருகிறார்கள். தலைமுடி என்பது வெட்ட வெட்ட வளரும். அதனால் தலை முடியை காணிக்கையாக கொடுப்பது ஒன்றும் பெரிய விஷயம் அல்ல. ஆனால், அதற்கு பின்பு ஒரு பேருண்மை ஒளிந்து கிடக்கிறது. பொதுவாக பழங்காலத்தில் ஒருவருக்கு தண்டனை கொடுக்க வேண்டும் என்றால் தலை முடியை மழித்து தண்டனை கொடுப்பார்கள். ஆகவே தலை முடியை மழிப்பது என்பது ஒரு அவமான செயலாக கருதப்பட்டது. தற்போது தலை முடியை காணிக்கையாக கொடுக்கும் போது மக்களின் பார்வையில் கடவுளுக்காக தன்னைத்தானே அவமானபடுத்திக் கொள்வது என்ற கருத்திலேயே தலை முடியை காணிக்கயாக கொடுக்கிறார்கள்.

சில பக்தர்கள் தமிழகம் எங்கும் இருந்தும் மரியன்னையின் பிறந்த நாளுக்காக நாகப்பட்டிணம் வேளாங்கண்ணி நோக்கி தங்கள் ஊர்களில் இருந்து நடை பயணமாக தொடர்ந்து பல ஆண்டுகளாக நடந்து வந்து கொண்டிருக்கிறார்கள். பல இன்னல்களையும் உடல் உபாதைகளையும் கடந்து மாதாவை மனதில் நிறுத்தி மாதாவை கண்டு தரிசிக்கவேண்டும் என்ற ஒரே நோக்கில் தங்கள் இலக்கை அடையும் வரை எல்லாவித கஷ்டங்களையும் மனதில் நிறுத்தி நடை பயணமாக மாதாவை அடைந்து தங்கள் பக்தியை வெளிப்படுத்துகிறார்கள்.

சில மாதா பக்தர்கள் நாகப்பட்டிணம் வேளாங்கண்ணி கல்வாரி பாதையில் முழந்தாலிட்டு நடந்தவாறு மரியன்னையை நோக்கி வருகிறார்கள் அப்படி நடக்கும்போது ஜெபமாலையை கையில் ஏந்தியும் மெழுகுதிரிகளை கையில் ஏந்தியும் தங்கள் கால்களை வருத்தி மரியன்னையை மனதில் நிறுத்தி உடல் நோக மாதாவிடம் மனம் உருகி வேண்டி ஜெபிக்கிறார்கள்.

சில பக்தர்கள் தங்கள் அன்பை வெளிப்படுத்த காணிக்கைகள் அளித்து மகிழ்கிறார்கள். பணம் மட்டுமல்லாமல் காய்கறிகள், தங்கள் வயல்களில் விளைந்த விளைபொருட்கள், மளிகை பொருட்கள், புடவைகள், ஏன் சில நேரங்களில் உயிருள்ள கோழி ஆடு போன்ற விலங்கினங்களை கூட காணிக்கையாக கொடுத்து அவர்கள் மரியன்னையின் மீது வைத்திருக்கும் அளவிலான அன்பை வெளிப்படுத்துகிறார்கள்.

இன்னும் சிலர் மாதாவை வேண்டி பக்தர்களுக்கும் பொது மக்களுக்கும் ஏழைகளுக்கும் வயதான முதியவர்களுக்கும் உணவு கொடுத்து அவர்கள் உண்ணும் போது மனம் மகிழ்ந்து அதன் மூலம் தங்கள் மாதா பக்தியை வெளிப்படுத்துகிறார்கள்.

சிலர் மரியன்னையின் உருவம் தாங்கிய சிறிய அளவிலான தேர்களை செய்து அத்தேர்களை வெகு தூரம் இழுத்துக் கொண்டு உடல் வருந்த மரியன்னையை அடைந்து பேரானந்தம் அடைகிறார்கள். இன்னும் சில வாலிப வயதினர்கள் தமிழகத்தின் பல பகுதிகளில் இருந்து மிதிவண்டி வாயிலாக மரியன்னையைத் தேடி வந்து ஆசி பெறுகிறார்கள்

இவ்வாறாக பல்வேறு வகையில் மாதாவைப் போற்றி வணங்கினாலும் நாம் ஒருவருக்கு ஒருவர் அன்பு செய்து, தேவையில் இருப்பவர்களுக்கு உதவி செய்தோம் என்றால் அதுவே மாதாவுக்கு செய்யும் சிறப்பான வணக்கமாகும்.

ஆகட்டும்



# பொதுநிலையினரின் பார்வையில் மரியா 2

திரு. பரிசுத்தமணி சோழிங்கநல்லூர், சென்னை

## பொதுநிலையினரின் மரியன்னை வணக்கம்

மரியன்னையை துதிப்பதில் மரியாயின் சேனையின் பங்கு மிகவும் பெரியது. இந்த அமைப்பானது ஒரு சில பொது நிலையினர்களால் அயர்லாந்து நாட்டில் துவங்கப்பட்டது, இப்போது உலக அளவிலே ஏறக்குறைய 30 லட்சம் உறுப்பினர்களைக் கொண்ட பெரிய இயக்கமாக மரியன்னையை வணங்கி செயல்படுகிறது. மரியின் வணக்கம் கத்தோலிக்க கிறிஸ்தவர்களிடையே பெரிதும் போற்றப்படுகிறது. மரியன்னை கீழ்ப்படிதலில் நமக்கெல்லாம் பெரிதும் முன்மாதிரியாக இருக்கிறார். இயேசுவைப்போல மாதாவும் பல சோதனைகளுக்கு உட்பட்டு உலக நன்மைக்காக அமைதி காத்தார். கபிரியேல் வானதூதர் மங்கள வார்த்தை அறிவித்தபோது அதை அமைதியாக ஏற்றுக் கொண்டார். எவருக்கும் கிடைக்காத நான்கு அருள் அடையாளங்களை ஆண்டவர் அன்னைக்கு அருளி இருக்கிறார். மாதா இறைவனின் தாய், என்றென்றும் கன்னியானவர், ஜென்ம பாவம் இல்லாமல் பிறந்தவர் மற்றும் விண்ணேற்பு அடைந்தவர். இந்த மாபெரும் அடையாளங்களை பெற்றதால்தான் அவர் பேறுபெற்றவர் என்று அழைக்கப்படுகிறார். அவரை திருச்சபையில் பல வகையிலும் மக்கள் போற்றி வணங்கி வருகிறார்கள்.

திருச்சபையின் ஆரம்ப காலத்திலே இல்லங்களிலே மக்கள் ஒன்று கூடி கடவுளை ஆராதித்து தொழுதார்கள். அப்படி ஒன்று கூடுகையிலே தங்கள் வீடுகளில் வெளிச்சத்திற்காக மெழுகுதிரி ஏற்றி வைத்து ஜெபிக்கத் தொடங்கினார்கள். அதுவே நாளடைவில் மெழுகுதிரி ஏற்றுவது பக்தியின் அடையாளமாக மாறிவிட்டது. இன்று மரியன்னையை வணங்குபவர்கள் மெழுகுதிரி ஏற்றி வணங்குவதை ஒரு பக்தி முயற்சியாகவே தொடர்ந்து வருகிறார்கள். மெழுகுவர்த்தியை கையில் ஏந்தியும் அல்லது அதற்குரிய இடத்தில் எரிய வைத்து ஜெபிப்பதையும் இன்றளவும் தொடர்ந்து வருகிறார்கள்.

சில பக்தர்கள் மாதாவை வணங்கும்போது ஜெபமாலைகளை ஜெபித்து அதுவும் சங்கிலி தொடர் போன்று தொடர்ந்து மணிக்கணக்காக மரியன்னையை மனதில் நிறுத்தி ஜெபமாலை ஜெபித்து வணங்குகிறார்கள். அது மட்டும் அல்லாமல் மனம் உருகி ஆராதனைகள் மூலமும் மாதாவை வணங்கி மகிழ்கிறார்கள்.

சிலர் மாதாவுக்காக காவிஆடை அணிந்து கொண்டு கழுத்தில் ஜெபமாலை அணிந்து கொண்டு விரதமிருந்து மாதாவின் ஆலயத்திற்கு செல்கிறார்கள். காவி ஆடை என்பது தவக்கோலத்தை குறிக்கும். அது மட்டுமில்லாமல் வண்ண வண்ண ஆடைகள் அணிந்து நமது பெருமையை பறைசாற்றுவது என்ற நிலையை மாற்றி அந்நிலையை





# அன்னையின் 52 திருத்தலங்களை நோக்கி...

அருள்பணி. சகாயராஜ் ம.ஊ.ச., இத்தாலி.



## அடைக்கல அன்னை திருத்தலம் திருக்காவலூர், ஏலாக்குறிச்சி

17ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் கிறிஸ்தவம் பரவலாக பெருகிக் கொண்டிருந்தது. இதே காலகட்டத்தில் பல ஆட்சியாளர்கள் கிறிஸ்தவத்திற்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்து, சமயப்பரப்புதலுக்கு இடையூறாக இருந்ததோடு மட்டுமல்லாமல், கிறிஸ்தவர்களை பல்வேறு கொடுமைகளுக்கு உள்ளாக்கினர்.

இக்காலக்கட்டத்தில், தஞ்சாவூரில் புதிய ஆட்சி ஒன்று ஏற்பட்டது. மராத்திய போன்சலே பரம்பரையின் ஆட்சி வெங்கோஜி போன்சலேவால் கி.பி. 1674ல் ஏற்படுத்தப்பட்டது. கிறிஸ்தவர்களுக்கு எதிரான நிலைப்பாட்டை இவர் கொண்டிருந்தார். இவரது மகன் ஷாஜி போன்சலே இவரைவிட கடுமையாக கிறிஸ்தவர்களை நடத்தினார். எனவே, இவர் தமிழகத்தின் நீரோ மன்னன் என்றழைக்கப்பட்டார். இக்காலக்கட்டத்தில் தஞ்சை மற்றும் சுற்றுவட்டாரத்தில் கொடுமைகளுக்கு உள்ளான கிறிஸ்தவர்கள் கொள்ளிடம் ஆற்றுக்கு வடக்கே சென்று அங்கிருந்த வனப்பகுதியில் தங்கள் வாழ்வைத் தொடங்கினர். அப்பகுதிதான், ஏலாக்குறிச்சியாகும்.

முதன்முதலில் புளியங்குடியிலிருந்து சில கிறிஸ்தவர்கள் ஏலாக்குறிச்சியில் குடியேறினர். அங்கு ஒரு சிற்றாலயம் கட்டப்பட்டது. அங்கு இயேசு சபையைச் சார்ந்த அருட்பணி சைமன் கார்வலோ முதல் பங்குப் பணியாளராக பணிபுரிந்தார். கி.பி. 1705ஆம் ஆண்டு மதுரை மறைப்பணித்தளத்திலிருந்து திருவாங்கூர் பகுதிக்கு அவர் பணிமாற்றம் செய்யப்படவே, அருட்பணி. மனுவேல் மச்சடோ ஏலாக்குறிச்சியின் பங்குப் பணியாளரானார்.

இவருக்குப் பின், இப்பணித்தளத்தில் பங்குப் பணியாளராக, தமிழ்த்தாயின் தவப்புதல்வனாக தமிழுக்கு தன்னிரகற்ற சேவையாற்றிய வீரமாமுனிவர் பொறுப்பேற்றார்.

கி.பி. 1680ஆம் ஆண்டு நவம்பர் 8ஆம் நாள் இத்தாலியில் உள்ள மந்துவா பகுதியில் உள்ள கஸ்திலியோனே தெல்லே ஸ்திவேரே என்ற ஊரில் பிறந்தார். இவரது இயற்பெயர் ஜோசப் கான்ஸ்டன்டைன் பெஸ்கி என்பதாகும். கி.பி. 1698ஆம் ஆண்டு இயேசு சபை துறவியானார். கி.பி. 1709ஆம் ஆண்டு குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். வேதபோதக பணியில் ஆர்வம் கொண்டிருந்த பெஸ்கி கி.பி. 1710ஆம் ஆண்டு அக்டோபர் மாதம்

கோவா வந்தடைந்தார். தாம் வந்தடைந்த நாட்டு சூழல்களையும், மொழியையும் கற்றுத் தேர்ந்தபின், மதுரை மறைப்பணித்தளத்தில் பணியாற்றுவதற்காக கி.பி. 1711ஆம் ஆண்டு மே மாதம் மதுரை வந்தடைந்தார். மறவநாட்டில் பணியாற்றிய பிறகு, வடதமிழகத்திலும் பணிபுரிந்தார். பின், கி.பி. 1716ஆம் ஆண்டு ஏலாக்குறிச்சியின் மூன்றாவது பங்குப் பணியாளராக பொறுப்பேற்றார்.

முதலில் தனது பெயரை தைரியநாதர் என்று இந்திய பெயராக மாற்றி கொண்டார். பின், தமிழ் மீது தணியா தாகம் கொண்டதால் வீரமாமுனிவர் என்று தமிழ்படுத்திக் கொண்டார். கிறிஸ்துவின் சீடராக, நற்செய்தி அறிவிப்பதில் பேரார்வம் கொண்டு இந்தியா வந்த வீரமாமுனிவர், தமிழ் மொழியை பேரார்வத்தோடு கற்றார். தமிழ் மொழியோடு தெலுங்கு, சமஸ்கிருதம் போன்ற மொழிகளையும் கற்றுத் தேர்ந்தார்.

இவர் தமிழ் மொழிக்கு செய்த தொண்டுகள் இவர் எழுதிய அழியாக் காவியங்கள் மட்டுமல்லமால், இவர் செய்த மொழி சீர்திருத்தமும் ஆகும். அந்நாளில், தமிழ் வாசிப்போருக்கு இருந்த குறில், நெடில் பிரச்சினைகளை தீர்த்து வைத்த பெருமை வீரமாமுனிவர் அவர்களையே சாரும். இன்று நாம் நெடிலாகப் பயன்படுத்துகின்ற, ‘ஏ’, ‘ர’ மற்றும் ‘ே’ என்பவை எல்லாமே குறில் எழுத்துக்களாவே அதாவது, ‘எ’, ‘ா’ மற்றும் ‘ெ’ என்று எழுதப்பட்டு வாசிக்கும் சொற்களின் பொருளுக்கேற்ப வாசிக்கப்பட்டது. அடிகளார் அவர்களே நெடில் எழுத்துக்களுக்கு அடிக்கோடிட்டும், ஒற்றை கொம்பை இரட்டையாகவும் மாற்றி, குழப்பமில்லாமலும், தெளிவோடும் நம் மொழியை நாம் வாசிக்கவும், புரிந்துகொள்ளவும் உதவினார் என்பது நமக்கு பெருமையளிக்கும் செய்தியாகும்.

தமது 36 ஆண்டுகால இந்திய வாழ்வில் 36 நூல்களைப் படைத்தார். தமிழ் மொழியில் இருந்த அத்துணை பாடல் முறைகளை பயன்படுத்தி பாடல்களையும், நூல்களையும் இயற்றினார். சதுரகராதி இவரின் படைப்பு திறனுக்கு கட்டியம் கூறுவதாக அமைந்துள்ளது. பரமார்த்தகுரு கதை என்கிற நகைச்சுவை கதை வாயிலாக தமிழுக்கு சிறுகதை வடிவத்தை தந்தவரும் இவரே. இவர் இலத்தீன் மொழியில் திருக்குறளை மொழிபெயர்த்தார்.

ஏலாக்குறிச்சியில் இவர் பணியேற்ற காலத்தில் மிகப்பெரிய பொருளாதார நெருக்கடி இருந்தது. தஞ்சை தரணியெங்கும் வறுமையின் தாக்கம் ஏலாக்குறிச்சியிலும் தெளிவாய் புலப்பட்டது. மாடுகட்டி போராடித்தால் மாளாது என்று யானைக் கட்டி போரடித்த தஞ்சையின் வறுமை, கி.பி.1728ஆம் ஆண்டளவில் பிள்ளைகளை விற்று சாப்பிடும் அளவுக்கு வந்தது. பிள்ளை விற்க தடைவிதித்த சட்டங்களெல்லாம் இயற்றபடும் கொடுமையையும் தஞ்சை கண்டது.

இச்சூழலில் பணிபுரிந்த அடிகளார் அவர்களால், தன்னிடம் பணிபுரிந்த வேதியர்களுக்கு கூட ஒரு ரூபாய் சம்பளம் தரும் சக்தி இல்லாதவராக இருந்தார். கிறிஸ்துவை போதிப்பதை விட, எத்தனை பேரை கிறிஸ்தவர்களாக்கினோம் என்கிற எண்ணிக்கை போராட்டம் நடைபெற்று கொண்டிருந்த காலம் அது. பல பிரிவினை சபைகள் தமிழகத்தில் காலூன்றி கொண்டிருந்த நேரம். கத்தோலிக்க திருஅவை இச்சபையினரின் பொருளாதார வசதிகளோடு போட்டிபோட முடியாமல் தவித்த நேரத்தில், நாங்கள் பத்து ரூபாய் சம்பளம் தருகிறோம் என்றவுடன், அடிகளாரோடு பணியாற்றி சில வேதியர்கள் அவர்கள் பக்கம் போனபோது மனம் நொந்தார் வீரமாமுனிவர். ஒரு சிற்றாலயம் ஒன்றை கட்டினார். சிற்றாலயம் அமைந்த இடத்திற்கு திருக்காவலூர், அதாவது கடவுள் காக்கும் ஊர் என்று பெயரிட்டார். தான்



மரிவழி இறைப்பணி

பிடித்துவிடும் . அம்மாவுக்கு வயதாகி விடுகின்றபோது தன் குழந்தையை பராமரிக்க வேண்டும் என்பதற்காகவே மனைவி என்கிற நிலையில் இன்னொரு பெண் இடம் பெறுகிறாள். அம்மாவின் அன்பு தொடரவே மனைவி என்கிற உறவு மனிதர்களுக்குத் தேவைப்படுகிறது.

வாழ்க்கைப் பயணத்தில் அம்மாவின் பங்கு மிக முக்கியம். தன்னைப் பெற்றவளின் அன்பும் அரவணைப்பும் ஒருவருக்கு இறுதிவரை கிடைத்துவிட்டால் வாழ்வில் அவருக்கு வெற்றிமேல் வெற்றிதான். நமது சமூகங்களில் அம்மாக்களில் பலபேர் தங்கள் கடமைகளையும் பொறுப்புக்களையும் இன்னும் உணராமல் இருக்கின்றார்கள். தாங்கள் கடவுளின் கருணை வடிவங்கள் என்பதை வாழ்க்கை பரபரப்பில் மறந்து போகின்றார்கள். தங்கள் மீது சுமத்தப்பட்டுள்ள ஒப்பில்லா கடமையையும் பொறுப்பையும் அன்னையர்கள் அறிந்துகொண்டு அதற்கென தங்களை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். உங்கள் குழந்தையின் முதல் ஆசிரியர் நீங்கள் என்பதை அறிவீர்களா? கணினி காலத்தில் குழந்தைகள் இணைய தளத்திலிருந்து ஏராளம் கற்றுக் கொண்டாலும் அவர்கள் எக்காலத்திற்கும விரும்பி படிக்கும் விருப்பப் பாடம் உங்கள் வாழ்க்கை என்பதை மறந்துவிடாதீர்கள். பெண்ணிலே தீயவர்கள் பலர் இருக்கலாம். ஆனால் அம்மாக்கள் ஒருபோதும் தீயவர்களாக இருந்துவிடக் கூடாது. குழந்தைகளுக்கு முன்மாதிரியாக இருக்கிற தாய்மார்களை அவர்களின் குழந்தைகள் மட்டுமல்ல கடவுளே கூட மன்னிக்க மாட்டார். தாய்மார்களின் தியாகம் என்றென்றைக்கும் நினைக்கப்படும். அவசரமும் போட்டியும் நிறைந்த உலகத்தில் குழந்தைகளை ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்தி வெற்றியின் சிகரத்திற்கு அழைத்து வருகிற கடமையை அம்மாக்கள் ஏற்க வேண்டும். மனிதர்களிடையே அவநம்பிக்கை விதைகளை விதைக்க பலபேர் இருக்கின்றார்கள். ஆனால் நம்பிக்கையின் நாற்றங்கால்களாக தாய் மட்டுமே இருக்க முடியும். தாய்மார்களே, தொலைக் காட்சியின் தொடர்களுக்குள்ளே நீங்கள் கரைந்து போனால் நாளைய வரலாற்று மனிதர்களாய் எப்படி உங்கள் குழந்தைகள் வலம் வருவார்கள்? நீங்கள் தெருச் சண்டைகளிலே இறங்கி நாவாடுவதைப் பார்க்கும் குழந்தைகள் எப்படி நாளைக்கு அமைதியின் கருவியாய் மாறுவார்கள்? ஒழுக்க நெறிகளை ஓரங்கட்டிக் கொண்டு சுகபோகங்களில் நீங்கள் சுற்றித் திரிந்தால் உங்கள் குழந்தைகளின் நாளைய நிலை என்ன? நினைத்துப் பாருங்கள். இயேசுவின் சிலுவைப் பயணத்தில் அவரை சந்தித்து ஊக்கப்படுத்திய அன்னை மரியாவை நினைத்துப் பாருங்கள்.

**இயேசுவின் உடலை மடியில் சுமக்கிறார் மரியன்னை**

மரணத்தைத் தழுவிய இயேசுவின் மாணிக்க உடலை மரியன்னை மடியில் ஏந்தி தாலாட்டுகின்றார். வேதனைகளையே வாழ்நாள் முழுவதும் சுமந்து பழகிப்போன அன்னை மரியாவுக்கு மரித்த நிலையில் இருக்கும் தன் மகனை மடியில் சுமப்பது வேதனையின் உச்சக்கட்டம்.

இயேசுவின் பாடுகளில் பங்கேற்று அவரது இறையாட்சிப் பணியில் தன்னை முழுவதுமாக இணைத்துக் கொண்ட மரியன்னையை தலைமுறைகள் யாவும் தவறாமல் பேறுபெற்றவள் என்றே போற்றி வருகின்றது. மரியன்னையைப் போல் ஒவ்வொரு அன்னையும் மாறிவிட்டால் இந்த உலகில் இயேசுக்களுக்கு பஞ்சமிருக்காது.

நமது அன்னை மரியாளின் புதுமை திருத்தலத்திலே கூடியிருக்கின்ற நாம் அனைவரும் அவ்வன்னையிடம் செபிப்போம். இங்கே கூடியிருக்கும் ஒவ்வொரு பெண்ணும் ஒவ்வொரு மரியாளாக மாற செபிப்போம். ஒவ்வொரு ஆணும் ஒரு இயேசுவாக மாற முயற்சியெடுப்போம்.

பூமியின் இந்த புனிதத் தாய்மை போற்றி பாதுகாக்கப்பட வேண்டும். அதன் வளத்திற்கும் நலத்திற்கும் கெடுதல் விளைவிக்கும் அனைத்தும் தவிர்க்கப்பட வேண்டும். அதனை மாசுபடுத்துபவை, அதன் அழகினை குலைப்பவை, அதிலுள்ள உயிரினங்களை அழிப்பவை போன்றவை எல்லாம் விலக்கப்பட வேண்டும். குறிப்பாக இன்று பொருளாதார முன்னேற்றம், தொழில்துறை வளர்ச்சி என்ற போர்வையில் ஒரு சிலரது சுயநலமே மேலோங்கி நிற்கிறது. சுற்றுப்புறச் சூழலைப் பேணிக் காக்கும் உணர்வு இன்றி இந்த மக்களின், மண்ணின் வளங்கள் சுரண்டிச் சூறையாடப்படுகின்றன. நீர் வளம் மாசுபடுத்தப்படுகின்றது. நிலத்தின் பச்சைப் பசுமைகள் பாழ்படுத்தப்படுகின்றன. பொறுப்பற்ற இந்த முறைகள் எதிர்க்கப்பட வேண்டும். மேலும் ஒவ்வொரு மனிதனும் குடும்பமும் சமூகமும் தங்கள் தங்களது சூழமையை தூய்மையாக வைத்திருப்பதும், சுற்றிலும் பசுமையைப் பாதுகாத்து, வளர்ப்பதும் இன்றியமையாதவை. இன்று மரியாவின் தாய்மை நமக்குச் சொல்லும் செய்திகளும் இவையும் முக்கியத்துவம் வாய்ந்தவையே.

எனவேதான் மரியாவின் தாய்மையை புவியின் தாய்மையின் புகழ்ச்சி என வருணிக்கின்றோம்.

### நம் கல்வாரி பாதையில் மரியா

கல்வாரியை நோக்கி காயங்களோடு நடந்து போகின்ற இயேசுவை வழிநெடுக மக்கள் வேடிக்கை பார்க்கின்றனர். படைவீரர்களோ தயவு தாட்சணியம் இல்லாமல் தாங்கள் பெறுகிற கூலிக்காக சாட்டைகளை சுழற்றுகின்றனர். கண்ணுக்கெட்டுகிற தூரத்தில் கருணையின் வடிவமான தன் அம்மாவும் தன் சிலுவைப் பயணத்தில் தன்னோடு நடந்து வருவதை இயேசு பார்க்கின்றார். இயேசுவை கெஸ்த்மனி தோட்டத்திலே படை வீரர்கள் பிடித்துக் கொண்டு போனதை அறிந்த நேரம் முதல் மரியன்னை மனத்துயரத்தோடு அவர் இருக்குமிடத்திலே அமைதியாக அமர்ந்திருந்தார். உலக மீட்பில் தனது மகன் இயேசுவுக்கு பக்கப்பலமாக இருக்க வேண்டும் என்று அன்னை மரியாள் உறுதி கொள்கின்றார். சிலுவைப் பயணத்திலே இயேசுவை நிழல்போல தொடர்ந்து அவருடைய பாடுகளில் பங்கேற்றுக் கொண்டிருக்கின்றார். இந்த அன்னையை சந்தித்தபோது மனதிற்குள்ளே ஆனந்தப்படுகின்றார். பணிவாழ்விலே பலபேருடைய வாழ்த்துதல்களையும் பாராட்டுதல்களையும் வாங்கிகொள்ள முன்வராத மரியாள் பலருடைய ஏளனப் பேச்சுகளையும் நகையாடலையும் ஏற்றுக்கொண்டு சிலுவைப் பயணத்தில் துணிச்சலோடு பங்கேற்கிறாரே என்று இயேசு தனக்குள்ளே பெருமைப்படுகின்றார். வழியில் தன் தாயை சந்தித்த பிறகு இயேசுவிற்கு மனதிலும் உடலிலும் புது வேகம் பிறக்கிறது. வளமான நாட்களில் வளைய வளைய வந்தவர்கள் வருத்தம் வரும்போது இருந்த இடம் தெரியாமல் ஓடிவிட்டார்கள். உலகமே ஒதுங்கி விட்டாலும் தன்னை உதிரத்தில் தாங்கியவர் இன்னமும் அருகிலேயே இருப்பது இயேசுவுக்கு ஆறுதலாக மட்டுமல்ல, ஆதரவாகவும் இருக்கிறது.

இறைவனின் படைப்பில் அம்மா முக்கிய இடம் வகிக்கிறார். உறவுகளுக்கெல்லாம் அம்மாதான் அடிப்படை. இறைவன் தான் படைத்த மனிதர்களைத் தனித்தனியே அருகிலிருந்து அன்பு காட்ட இயலாது என்பதால்தான் தனக்குப் பதிலாளாய் அம்மாக்களை ஏற்படுத்தியுள்ளார் என்கிறார் கவிஞர் ஒருவர். கடவுளின் கருணையை அம்மாவின் கண்களிலே காணலாம். அம்மாவின் ஆதரவு இருக்கிற குழந்தை ஆகாயத்தையே எட்டி





கட்டியிருந்த சிற்றாலயத்தில், மணிலாவிலிந்து தான் தருவித்திருந்த அன்னைக்கு அடைக்கல அன்னை என்று பெயர் சூட்டினார். திசைதெரியமால் தவிக்கும் விசுவாசிகளுக்கு அவர் அடைக்கலம் தந்து பாதுகாப்பாக இருக்கிறார் என்பதை அனைவருக்கும் இதன் வாயிலாக வெளிப்படுத்தினார். கித்தேரியம்மாள் கெபி கட்டி, கித்தேரியம்மாள் அம்மானை பாடி மக்களுக்கு விசுவாசத்தையும், நம்பிக்கையையும் ஊட்டினார்.

அன்னையை புன்னகையோடு, பொன்னகையும் அணிந்த தமிழ் பெண்ணாக வடித்து அந்தச் சுரூபத்தை மணிலாவிலிருந்து தருவித்து, தான் பொய்யா மறை திசையாம் வடதிசை நோக்கி எழுந்தருளச் செய்து சொற்கோவிலோடு கற்கோவிலும் கட்டிய பெருமை வீரமாமுனிவர் அவர்களையே சாரும்.

தன் மக்களை ஒன்றிணைக்க பல்வேறு முயற்சிகளை வீரமாமுனிவர் செய்து கொண்டிருந்தபோது, இறைவன் அளித்த ஒரு வரமாக அமைந்தது இந்நிகழ்வு. ஏலாக்குறிச்சி அமைந்திருந்த அரியலூர் பகுதியில் சிற்றரசனாக இருந்தவர் அரங்கப்ப மழவராயர் நயினார் ஆவார். அவர் இராஜப்பிளவை என்கிற தீராத நோயினால் கடுமையாக வாடிக்கொண்டிருந்தார். மரணம் அவரை சந்திக்க ஆவலாய் காத்திருந்தது. அப்போது, வீரமாமுனிவர் பற்றியும், அடைக்கல அன்னையின் அற்புதமான வரங்களைப் பற்றியும் கேள்விப்பட்ட அரங்கப்ப மழவராயர், தன் மந்திரி பிரதானிமார்களோடு வீரமாமுனிவரை தேடிவந்தார். இறைவன் தன்னையும், தன் மக்களையும் பாதுகாக்க அனுப்பிவைத்திருக்கும் ஒரு அற்புதமான கருவி அரங்கப்பர் என்றுணர்ந்தார் முனிவர்.

வலியால் தூக்கமேயின்றி தவித்துக் கொண்டிருந்தார் அரங்கப்பர். கடுமையான வெயில் வாட்டிக் கொண்டிருந்த நேரம் அது. அன்னையின் திருவடிகளில் அரங்கப்பரை சமர்ப்பித்து, அவரின் நோய் தீர்க்கவேண்டிண பச்சிலையை அன்னை தாமே சுட்டிக்காட்ட வேண்டும் என்ற வேண்டுதலுடன் வனம் நோக்கிச் சென்றார். சுட்டெரிக்கும் வெயிலில் புல், பூண்டெல்லாம் கூட வாடி வெயிலில் பொசுங்கியிருந்த நேரம் அது. கண்ணுக்கெட்டிய தூரம் வரை பச்சிலை ஒன்றுமில்லாததைக் கண்டு மனம் வாடிய நேரத்தில், கட்டாந்தரையிலிருந்து நீருற்று ஒன்று புறப்படுவதைக் கண்டார். அது, அன்னையின் செயல் என்பதை உணர்ந்து அந்நீரையும், அதைச்சுற்றி உருவான சேற்றையும் எடுத்து வந்து அரங்கப்பரின் பிளவையின் மீது பூசினார் வீரமாமுனிவர். என்னே அற்புதம்! அன்றிரவு அரங்கப்பர் ஆழ்ந்து உறங்கினார். கண்விழித்து கதிரவனை கண்டநேரத்தில் தன் நோய் முற்றிலும் நீங்கி வலிவேதனையின்றி இருப்பதை உணர்ந்தார். உள்ளம் உவகையால் பொங்கியது. தனது பரிந்துரையால் தன் அன்புத் திருமகனிடமிருந்து தனக்கு குணம் அளித்த அன்னையைக் காண விரைந்தோடினார். வீரமாமுனிவருக்கும், அவரைச் சார்ந்து வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கும் தேவையான பாதுகாப்பு அளிப்பதாக உறுதியளித்ததோடு, அன்னையின் கோவிலுக்கு 175 ஏக்கர் நிலத்தை கொடையாக அளித்ததோடு அதை கற்சாசனமாக பதிவிட்டு வைத்தார் அரங்கப்பர் மழவராயர்.

இச்சானமானது இன்றும் உள்ளது. அக்கல்வெட்டை அரியலூர் அரசுக் கலைக் கல்லூரி வரலாற்றுத் துறைப் பேராசியர் அமரர் திரு. இராமசேஷன் அவர்கள் படித்து எழுதியுள்ளார்.

அரங்கப்ப மழவராயர் தான் பெற்றுக் கொண்ட நலத்திற்கு கைமாறாக அளித்த 175 ஏக்கர் நிலப்பரப்பை சர்வேசுரனின் கோவிலுக்கு தானமாக அளித்து, அத்தானம் சூரியனும், சந்திரனும், பூமியும், நீரும் இருக்கும்

வரையில் அதை யாராவது அபகரித்து கொண்டால், அவர்கள் கங்கை கரையில் தானமாக தரப்பட்ட பசுவை கொன்ற பழிக்கொத்த பழியை அடைவர் என்கிறார்.

வீரமாமுனிவரின் காலத்திற்கு பிறகு பல்வேறு அதிசயங்கள் அற்புதங்கள் இத்திருத்தலத்தில் நடைபெற்றுகொண்டே வந்துள்ளது. வீரமாமுனிவரால் கட்டப்பட்ட சிற்றாலயம் நூற்றுக்கணக்கான பக்தர்களை ஈர்த்தது. அன்னையின் திருக்குளம் சிறிய அளவில் கட்டப்பட்டு, அதன்மேல் அன்னையின் திருஉருவமும் வைக்கப்பட்டது. திருயாத்திரை வருகிற பக்தர்கள் அனைவரும் அன்னையின் திருக்குளத்திலிருந்து தீர்த்தத்தை கொண்டு செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

வீரமாமுனிவர் பிறந்த மூன்றாம் நூற்றாண்டை சிறப்பிக்கும் விதமாக அங்கிருந்த ஆலயத்தை இடித்து புதிய பெருங்கோவிலாக கட்ட எண்ணம் கொண்டார் அன்றைய கும்பகோணத்தின் ஆயராக இருந்த மேதகு. பால் அருள்சாமி ஆண்டகை அவர்கள். தன் எண்ணத்திற்கு வடிவம் கொடுக்கும் விதமாக கி.பி. 1976ஆம் ஆண்டு மே மாதம் 9ஆம் நாள் புதிய ஆலயத்திற்கான அடிக்கல்லை நாட்டினார். அந்நாட்களில் பங்குப்பணியாளராக இருந்த அருட்பணி. அந்தோணிசாமி அடிகளார் அவர்கள் கருத்தோடு அப்பணியை மேற்கொண்டார்.

ஆலயம் படிப்படியாக கட்டப்பட்டு, முன்குறித்தப்படியே வீரமாமுனிவரின் மூன்றாம் நூற்றாண்டு நினைவாக கி.பி 1980 ஆண்டு ஏப்ரல் 25ஆம் நாள் பாண்டி-கடலூர் பேராயர் மேதகு செல்வநாதர் ஆண்டகை அவர்களால், கும்பகோணம் ஆயர் மேதகு பால் அருள்சாமி அவர்கள் முன்னிலையில் அர்ச்சித்து புனிதப்படுத்தப்பட்டது. இவ்வரிய நிகழ்வை 11 வயது சிறுவனாக நான் காணக்கிடைத்தது இறைவனின் அருஞ்செயலே.

அமெரிக்க ஐக்கிய நாட்டில் கலிபோர்னியா மாகாணத்தில் சன் போஸெ என்கிற மறைமாவட்டம் உள்ளது. கணினி துறைக்கு பெயர் போன இவ்விடம் சிலிக்கான் வேலி என்றும் அழைக்கப்படும். இங்குள்ள சான்த கிளாரா என்கிற பங்கில் பல புகழ்பெற்ற கணினி நிறுவனங்கள் உள்ளன. இந்நிறுவனங்களில் பணிபுரிய பெரும்பாலானோர் இங்கு கொண்டாடப்படும் நண்பகல் திருப்பலியில் பங்கேற்பது இன்றுவரை உள்ள வழக்கமாக உள்ளது. இங்கு அமைதியின் அரசி அன்னை மரியாவுக்கு 32 அடி உயர திருஉருவம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இத்திருத்தலத்திற்கு வருகிறவர்கள் உலக அமைதிக்காக உருக்கமாக அன்னையிடம் செபிப்பர்.

அமெரிக்காவில் பணிபுரிந்த கும்பகோணம் மறைமாவட்டத்தை சார்ந்த அருட்பணி. லூர்துசாமி அவர்கள் தன் பணிநிறைவுக்குப் பின் இந்தியா வந்தார். சில காலம் கழித்து அவர் கி.பி. 2010-ஆம் ஆண்டு ஏலாக்குறிச்சியின் பங்குத் தந்தையாக பணிநியமனம் செய்யப்பட்டார்.

பல நூற்றாண்டுகளாக அன்னையின் புகழ்பெற்ற திருத்தலமாக இருந்தாலும், சரியான போக்குவரத்து வசதிகள் இல்லாத காரணத்தினால், ஏலாக்குறிச்சிக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை திருவிழா காலங்களைத் தவிர ஏனைய நாட்களில் குறைவாகவே இருந்தது. பக்தர்களின் வசதிக்காக போக்குவரத்திற்கு உகந்த சாலை வசதிகளை மேம்படுத்த அடிகளார் அவர்கள் பெரும்முயற்சி எடுத்தார்கள். மேலும், அன்னையின் திருத்தலத்தின் பெயர் விளங்கச்செய்யும் வகையிலும், வரும் பக்தர்களின் பக்தி முயற்சிகளுக்கு உகந்ததாக இருக்கும் வகையிலும் வெண்கலத்தாலான அடைக்கல அன்னையின் திருஉருவம் ஒன்றை 53 அடி உயரத்தில் நிறுவ எண்ணம் கொண்டார்.

ஆகட்டும்





# மரியா - கடவுளின் கடிதம்



21

அருள்பணி. லூர்துசாமி ம.ஊ.ச.
நவதுறவியர் இல்லம், மாமல்லபுரம்.

## புவியின் தாய்மைக்கு புகழ்ச்சி

நாம் வாழும் நில உலகையும் அன்னை என்று அழைப்பது நம் தமிழ் மரபு. இதனால்தான், பூமித்தாய், நிலத்தாய் என நாம் அதனைக் குறிப்பிடுகிறோம். இவ்வாறு பூமியை அன்னையாகக் கருதும் முறை ஏறக்குறைய எல்லாப் பண்பாடுகளிலும் உண்டு. ஏனெனில் உயிர்களுக்கெல்லாம் பிறப்பிடம் இந்த நில உலகே. உயிரினங்கள் எல்லாம் அதிலிருந்து தோன்றுவது மட்டும் அன்று, உயிர்களின் வாழ்வையும் வளர்ச்சியையும் பாதிக்கின்றது. அதில் நிகழ்ந்த நீர்நிலை, தட்பவெட்ப, காற்று மண்டல மாற்றங்கள் காரணமாக உயிரினங்கள் பல புது பரிணாம வளர்ச்சி அடைந்தது உண்டு. முற்றாக அழிந்து மறைந்துவிட்ட வரலாறுகளும் உண்டு.

காலம் காலமாக, வகை வகையான உயிர்களைப் பிறப்பித்து, வளர்த்துவிட்ட இந்த மண்ணுலகமே இன்று அழிந்து ஒழிந்து விடும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. தொழிற்சாலைகள், அணுமின் நிலையங்கள் கழிவுகள் ஆயிரம், பல்லாயிரம் ஆண்டுகளாக நம்மை வாழவைத்த நதிகளிலும் நீர்த் தேக்கங்களிலும் இன்று நஞ்சைப் பாய்ச்சி அவற்றை பாழ்படுத்திக் கொண்டிருக்கிறது. ஊர்திகளும் இயந்திரங்களும் உமிழும் வாயுக்களால் நம்மை சூழ்ந்து காக்கும் காற்று மண்டலமே நமக்கு இன்று எதிரியாகி எத்தனையோ நோய்களுக்கும் காரணமாகிக் கொண்டிருக்கிறது.

மரங்களும் காடுகளும் கண்மூடித்தனமாக அழிக்கப் படுவதால் நாட்டில் மழைவளம் குன்றி, பச்சைப் பூத்த்ப் பகுதிகள் பல மெல்ல மெல்ல இன்று பாழ வெளிகளாக மாறிக் கொண்டிருக்கிறது. இன்றும் எத்தனையோ வழிகளில் நிகழும் இந்த சுற்றுப் புற சூழலின் சீரழிவு காரணமாக இந்த மண்ணுலகே இன்று சிறிது சிறிதாக மலடாக்கப்படுகிறது. எதிர்காலம் ஒன்று அதற்கு உண்டா எனும் கேள்வி கூட இன்று எழத் துவங்கி இருக்கிறது.

இத்தகைய பின்னணியில்தான் இன்று கிறிஸ்தவம் மரியாவின் தாய்மையை கொண்டாடுகிறது? மரியாவின் தாய்மைக்கு விழா எடுக்கும் போது நாம் இந்த மண்ணின் தாய்மையையும் கொண்டாடுகிறோம். கொண்டாடவும் வேண்டும். ஏனெனில் மரியா, நம்மைப்போலவே, இந்த மண்ணின் மகள். தாயென அதைச் சார்ந்திருக்கும் ஆயிரம் ஆயிரம் உயிர்களுள் அவளும் ஒருத்தி. அதன் வளமை. செழுமையின் உயர் வளர்ச்சி. உன்னத வெளிப்பாடு. ஆம், மரியாவின் தாய்மை என்பது ஒரு வகையில் இந்த பூமியினது தாய்மையின் முழுமையான மலர்ச்சியே. இவ்வாறு மரியாவின் தாய்மையில் நம் இந்த மண்ணின் மாண்பையும் மகிமையையும் மிகச் சிறப்பான முறையில் காண்கிறோம் ஏனெனில் மரியா வழியாக இறை மகனையே தன் மகனாகப் பெற்றெடுத்துவிட்ட பெருமையும் புனிதமும் இந்த பூமிக்கு உண்டு.

ஆகட்டும்



## வணக்கத்துக்குரிய வெனான்சியஸ் மரிய குவாதிரி OSM



**அருட் சகோ. பிலிப் ஜோஸப் ம.ஊ.ச**

நமது வணக்கத்துக்குரிய வெனான்சியஸ் மரிய குவாதிரி 1916 ஆம் ஆண்டு டிசம்பர் 16 ஆம் நாள் ஒரு சிறிய கிராமத்தில் பிறந்தார். திருமுழுக்கின்போது அந்தோணி என்று பெயரிட்டனர். மரியின் ஊழியர் சபை குருமாணவர்களுக்ககான கோடைக்கால வகுப்புகள் அந்தோணியின் கிராமத்தில் நடைபெற்றது. குருமாணவர்களோடு சேர்ந்து இந்த வகுப்புகளில் பங்குபெற, கிராமத்தில் உள்ள அனைத்து இளம் பிள்ளைகளுக்கும் அழைப்பு விடப்பட்டது. அந்தோணியும் மன மகிழ்வுடன் இதில் பங்கு பெற்றார். அந்தோணி தனது பள்ளிப்படிப்பை ரோன்சனோவில் (Ronzano) உள்ள மரியின் ஊழியர் துறவற இல்லத்தில் முடித்தார். அதன்பின் தனது நவதுறவை ரெஜோ எமிலியாவில் (Reggio-Emilia) உள்ள தூய அன்னை மரியாவின் திருத்தலத்தில் மேற்கொண்டார். 1933 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 29 ஆம் நாள் தனது முதலாவது வார்த்தைப்பாட்டின் மூலம் தனது அர்ப்பண வாழ்வை தொடங்கினார். வார்த்தைப்பாட்டின் பொழுது தனது பெயரை வெனான்சியஸ் என்று மாற்றிக் கொண்டார். தனது தத்துவவியல் படிப்பை போலொஞ (Bologna) நகரத்தில் முடித்து, இறையியல் படிப்பிற்க்காக 1935 ஆம் ஆண்டு ரோமை நகருக்கு வந்தார். 1937 ஆம் ஆண்டு அக்டோபர் 30 ஆம் நாள் வெனான்சியஸ் காலை செபத்திற்கும் திருப்பலிக்கும் வராதது அருட்தந்தையர்களுக்கு ஆச்சரியத்தை அளித்தது. ஏனெனில் அவர் எப்போதுமே, செபத்தையும் திருப்பலியையும் தவறியதே இல்லை. அவருடைய அறைக்கு சென்று பார்த்தால், அவர் இன்னும் படுக்கையிலேயேதான் இருந்தார். அவரால் எழுந்து காலை தரையில் வைக்க முடியவில்லை. எனவே, அவர்கள் மருத்துவரை அழைத்தனர். மருத்துவரும் வந்து இது ஒரு பருவகால காய்ச்சலாக இருக்கும் என்று முதலில் கூறினார். பின்னர் வெனான்சியஸ்விடம் பேசும் பொழுது, வெனான்சியஸ் கால்கள் இரண்டும் மிகவும் குளிர்ச்சியாக இருப்பதாக கூறினார். இதைக் கேட்டு மருத்துவர் அதிர்ச்சி அடைந்து, வெனான்சியஸ்வை கட்டிலில் விட்டு இறங்கி கால்களை தரையில் வைக்க முயற்சிக்குமாறு கேட்டுக்கொண்டார். வெனான்சியஸ் எவ்வளவு முயற்சி செய்தும் அவரால் முடியவில்லை. இதை கண்ட மருத்துவர் ஒன்றுமே சொல்லாமல் அறையை விட்டு சென்று விட்டார். பின்னர் மருத்துவர், இல்லத்தின் அதிபர் தந்தையிடம் மட்டும் இது ஒரு மரண முடக்குவாத நோய் என்றும், கொஞ்சம் கொஞ்சமாக காலிலிருந்து இந்த முடக்குவாதம் இதயம் வரை சென்று இன்னும் இரண்டு நாளில் வெனான்சியஸ் இறந்து விடுவார் என்றும் கூறிவிட்டு சென்றார். அவர் கூறியது போலவே, கொஞ்சம் கொஞ்சமாக வேதனைப்பட்டு நவம்பர் 2 நாள் 11,30 மணியளவில் இறைவனடி சேர்ந்தார். திருத்தந்தை பிரான்சிஸ் நமது வெனான்சியஸ்வை வணக்கத்திற்குரியவராக டிசம்பர் 14, 2015 அன்று அறிவித்தார்.





திருத்தலத்திற்கு வரும் பக்தர்களிடமும், மற்றும் தமிழகம் மற்றும் இந்தியாவின் பல பகுதிகளிலும் பழைய பித்தளை மற்றும் வெண்கல பாத்திரங்களை நன்கொடையாக தர விண்ணப்பம் வைத்தார். பித்தளை பாத்திரத்தின் பயன்பாடு குறைந்திருக்கும் இக்காலத்தில், தங்கள் வீடுகளில் பயன்படாமல் இருக்கும் வெண்கல மற்றும் பித்தளை பாத்திரங்களை ஆயிரக்கணக்கான நல்உள்ளங்கள் கொடையாக அளித்தனர். மேலும், பல நன்கொடையாளர்கள் இத்திருப்பணிக்கு உதவினர். பெறப்பட்ட பாத்திரங்களிலிருந்து அன்னையின் திருஉருவ வார்ப்பானது கி.பி. 2011ஆம் ஆண்டு மார்ச் 3 ஆம் தேதி, குடந்தை மறைமாவட்ட ஆயர் மேதகு அந்தோணிசாமி அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. அன்னையின் திருஉருவ அமைப்பு பணிகளை கும்பகோணத்திற்கு அருகில் உள்ள சுவாமிமலையைச் சார்ந்த புராதன சின்னம் அமைப்பாளர் திருவாளர் பிரவீண் அவர்களின் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

ஏலாக்குறிச்சி திருக்காவலூர் பங்கிலிருந்து பணிமாற்றம் பெற்றாலும், தன்னால் தொடங்கப்பட்ட இத்திருப்பணி நிறைவுறும் வரையிலும் அருட்பணி. லூர்துசாமி அவர்களும் தன்னால் இயன்ற அனைத்து உதவிகளையும் செய்தார். பித்தளை பாத்திரங்கள் உருக்கப்பட்டு, அன்னையின் திருஉருவம் வார்க்கப்பட்டு கைநேர்த்தியுடன் திருஉருவம் உருவாக்கப்பட்டது. திருஉருவத்தை அருட்பணியாளர் லூர்துசாமி அவர்களால் முன்னெடுக்கப்பட்ட இம்முயற்சியானது, அவருக்கு பின் பங்குப்பணியாளராக பொறுப்பேற்ற அருட்பணி. சுவக்கீன் அவர்களால் தொடரப்பட்டது. திருஉருவமானது செபமாலைத் தோட்டம் ஒன்றும் உருவாக்கப்பட்டு திருநிலைப்படுத்தப்பட்டுள்ளது.

அன்னையின் திருஉருவ அர்ச்சிப்பு திருநிகழ்வானது கொரோனா பெருந்தொற்று முடிவுக்கு வந்தவுடன், கி.பி. 2022ஆம் ஆண்டு ஏப்ரல் 30ஆம் தேதி குடந்தை ஆயர் அந்தோணிசாமி மற்றும் சேலம் மறைமாவட்ட ஆயர் தேகு அருள்செல்வம் இராயப்பன் அவர்களால் 53 அடி உயர அன்னையின் வெண்கலச் சுரூபமானது அர்ச்சிக்கப்பட்டது.

காவிரியின் கிளை நதியாம் கொள்ளிடத்தின் வடகரையில் அரியலூர் மாவட்டதில் அமைந்துள்ள இத்திருத்தலத்திற்கு இன்று நூற்றுகணக்கான பக்தர்கள் வந்து செல்கின்றனர். ஏறக்குறைய 350ஆண்டுகள் பழமையும், தமிழ் இலக்கியத்தில் அழியா இடமும், தமிழின் இனிமையையும் எடுத்துரைக்கும் தேம்பாவணி, திருக்காவலூர் கலம்பகம் போன்ற இலக்கிய நூல்களின் நாயகியாக விளங்கும் அடைக்கல அன்னையை நாடிச் செல்வோம், அன்னையின் அரவணைப்பில் என்றும் வாழ்வோம்.

இக்கட்டுரையை எழுத பல்வேறு செய்திகளையும், புகைப்படங்களையும் திருத்தலத்திற்கு நேரடியாக சென்று சேகரித்து அனுப்பிய என் சகோதரர் திரு. அடைக்கலசாமி அவர்களுக்கும், திருத்தல இன்றைய அதிபர் அருட்பணி. தங்கசாமி அடிகளாருக்கும், வானுயுர்ந்து நிற்கும் அன்னையின் திருஉருவம் உருவாக காரணமாய் இருந்து, பல தகவல்களை தந்துதவிய அருட்பணி. லூர்துசாமி அடிகளாருக்கும், அரங்கப்பரின் கல்வெட்டு பற்றிய அரிய தகவல்களையும், புகைப்படங்களையும் தந்துதவிய வரலாற்று ஆய்வாளர் திருமதி. நிவேதிதா லூயிஸ் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றிகளை சமர்பிக்கிறேன்.

**திருப்பயணம் தொடரும்..................**

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி

## 2 கொரிந்தியர், கலாத்தியர்



ச. பெ. அமல்ராஜ். ம.ஊ.ச.பொ.நி, திருச்சி - 21

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | | | | | | | | | 1 |
| | 7 | | | | | | | 8 | |
| | | 10 | | | | | | X | |
| | | | 12 | | | | | | |
| | | | | X | X | | | | |
| | | | | X | X | | | | |
| | | | | | | 11 | | | |
| | | | | | | | 9 | | |
| | 6 | | | | | | | 5 | |
| 3 | | | | | | | | | 2 |

**வலமிருந்து இடம்**

1)கடவுள் எங்களுடைய இன்னல்கள்……….எங்களுக்கு ஆறுதல் அளிக்கிறார். நாங்களே கடவுளிடமிருந்து ஆறுதல் பெற்றுள்ளதால் பல்வேறு இன்னல்களில் உழலும் மற்ற மக்களுக்கும் ஆறுதல் அளிக்க எங்களால் முடிகிறது.

2)நாங்கள்…………நற்செய்தி அழிவுறுவோருக்கே அன்றி வேறு எவருக்கும் மறைக்கப்பட்டிருக்கவில்லை.

5)நாங்கள் விடுத்த வேண்டுகோளை முன்னிட்டு மட்டும் அல்ல, அவரே மிகுந்த………. கொண்டிருப்பதால் அவராக உங்களிடம் புறப்பட்டு வருகிறார்.

8)ஏனென்றால் அவர் வலுவற்றவராய்ச் சிலுவையில் அறையப்பட்டார். ஆனால், கடவுளின் வல்லமையினால் அவர் உயிர் வாழ்கிறார். அவருடைய வலுவின்மையில் பங்கு……….நாங்களும் உங்கள் பொருட்டு கடவுளின் வல்லமையால் அவரோடு வாழ்வோம்.

9)எனவே இனி வாழ்பவன் நான் அல்ல் கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார். இறைமகன்மீது கொண்டுள்ள நம்பிக்கையின்……….நான் இவ்வுலகில் வாழ்கிறேன். இவரே என்மீது அன்புகூர்ந்தார். எனக்காகத் தம்மையே ஒப்புவித்தார்.

11) மாறுபட்ட கொள்கை எதையும் நீங்கள் ஏற்கமாட்டீர்கள் என்னும் உறுதியான நம்பிக்கையை ஆண்டவர் எனக்குத் தந்துள்ளார். ஆனால் உங்கள் உள்ளத்தைக் குழப்புவோர் எவராய் இருந்தாலும்…………தண்டனைத் தீர்ப்பைப் பெறுவார்கள்.

**இடமிருந்து வலம்**

3)இவ்வுலகக் கூடாரத்தில் குடியிருக்கும் நாம் இந்நிலையைத் தாங்க இயலாமல் பெருமூச்சு விடுகிறோம். இக்கூடாரத்தை விட்டு விலக வேண்டும் என்பதல்ல் மாறாக விண்ணக வீட்டைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதே நம் ………… வாழ்வுக்குரியது சாவுக்குரியதைத் தனக்குட்படுத்தும்.

4)கடவுளைப்பற்றிய அறிவுக்கு எதிராகத் தலைதூக்கும் அனைத்து மேட்டிமையையும் தகர்த்தெறிகிறோம். மனித எண்ணங்கள்…………..கிறிஸ்துவின் கட்டுப்பாட்டுக்குள் வருமாறு கட்டாயப்படுத்துகிறோம்





## 8 ஆம் பக்க தொடர்ச்சி…………………

மரியா கட்டியெழுப்புவதில் நிச்சயம் தனது பங்கை அளித்திருப்பார். இதுதான் அவர் பெற்ற உயிர்ப்பின் அனுபவம்.

**நமது அனுபவம்**

நமக்கும் இதே அனுபவம் ஒவ்வொரு நாளும் நற்கருணை விருந்தில் கிடைக்கின்றது. உயிருள்ள இறைவன் நம் உள்ளத்தில் எழுகிறார், உறைகின்றார், உரையாடுகின்றார், உறவாடுகின்றார், பயணிக்கின்றார். நமக்குள் வாழும் கிறிஸ்துவைக் கண்டு கொள்வோம். அவர் கூறுவதைக் கேட்போம். உயிர்ப்பு வாழ்வு வாழ்வோம். மகிழ்ச்சி, அமைதி, உண்மையோடு வாழ்வது ஆவியில் வாழும் வாழ்வு. சீடத்துவ மனப்பான்மை கொண்டு வாழ்வோம். பாஸ்கா அனுபவம், நற்செய்தி பரப்பும் பணியை சிறப்புற செய்ய நமக்கு அழைப்பு விடுக்கின்றது. இறைவார்த்தையை வாழ்வதிலும், எடுத்துரைப்பதிலும் நாம் ஆர்வம் காட்டுவோம். மரியா உயிர்ப்பு அனுபவம் பெறும்போது அவர் திருஅவையின் பிரதிநிதியாக காட்சி தருகின்றார். அவரைப் போன்று நாமும் இறைத்தேடலில் நம்மைக் கரைப்போம். இயேசுவின் தரிசனம் நமது வாழ்வில் நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. அதைக் கண்டு கொள்வோம். கிறிஸ்துவைக் கொடுப்பதும் உயிர்ப்பு அனுபவமே. பெண்கள் சிலர் கல்லறையை காணச் செல்கின்றனர். மதலேன் மரியாகூட இயேசுவை முதலில் கண்டு கொள்ளவில்லை. ஆனால் அன்னை மரியா நம்பினார். எனவே கல்லறைக்குச் செல்லவில்லை என்றும் கூறப்படுகிறது. நாம் இயேசுவைத் தேடி அங்கும் இங்கும் செல்லத் தேவையில்லை. அவர் நம்முள் குடிகொண்டு இருக்கின்றார். அவரைத் தேடுவோம், கண்டு கொள்வோம். ஒடுக்கப்பட்டோரில் அவரைக் கண்டு கொள்வோம். சின்னஞ்சிறிய ஏழைகளுக்குச் செய்த போதெல்லாம் எனக்கே செய்தீர்கள் என்று கூறி ஏழைகளோடும், தேவையில் இருப்போரோடும் தன்னை ஐக்கியப்படுத்தும் இயேசுவின் தரிசனத்தை ஒவ்வொரு நாளும் அனுபவிப்போம்.

**நிறைவுரை**

இயேசு உயிர்த்த பின் முதன் முதலில் அன்னை மரியாவுக்குத் தோன்றினார் என்று ஸ்பெயின் நாட்டு மக்கள் அதிகம் நம்புகின்றனர். உயிர்ப்பு பெருவிழா அன்று இரண்டு பவனிகள் அங்கு நடைபெறுகின்றன. முதலில் உயிர்த்த இயேசுவின் பவனி, இரண்டாவதாக உயிர்த்த இயேசு மரியாவுக்கு தோன்றும் காட்சியைக் கொண்ட பவனி. எனவே இந்த நம்பிக்கை தொன்றுதொட்டு மக்களிடையே இருந்து வருகிறது. துன்புறும் அன்னையாகவும், மகிழ்ச்சி நிறை அன்னையாகவும் மரியாவை திருஅவை நமக்குக் காட்டுகிறது. மரியாவைப் போன்று நாம் ஒவ்வொரு நாளும் பாஸ்கா அனுபவத்தைப் பெறுவோம். பாஸ்கா நிகழ்வு வலியுறுத்தும் அன்பை வாழ்வாக்குவோம். உயிர்த்த இயேசுவில் நம்மை இழப்பது என்பது இதன் பொருளாகும். இதனால் பலர் வாழ்வு பெறுகின்றனர். ஏன் இந்த உலகம் முழுவதும் வாழ்வைப் பெறுகின்றது. இத்தகைய நிலையில் இயேசுவின் புதிய கட்டளை நிறைவேறுகிறது. மரியா தன் மகனிடம் கொண்டிருந்த அதே அன்பை திருஅவையின் மீதும் காட்டுகிறார். எனவேதான் உயிர்ப்பு அனுபவம் பெற்றதும் திருச்சபையைக் கட்டியெழுப்பும் பணியில் தன்னை ஈடுபடுத்துகிறார். இறைவனைத் தேடும் அனைவருக்கும் அவரது தரிசனம் கிடைக்கும். அவர் விருப்பப்படி வாழ்வோர் அனைவரும் அவரைக் காண்பர். நாமும் இத்தகைய வாழ்வில் நம்மை இணைப்போம். இறை மனித உறவில் நமது வாழ்வின் அர்த்தத்தைக் கண்டு கொள்வோம்.

**முதல் வாசக முன்னுரை**

இயேசு கிறிஸ்துவைப் பற்றி பேதுரு ஆற்றிய உரையின் ஒரு பகுதி இன்றைய முதல் வாசகம். பேதுருவின் அருளுரையைக் கேட்ட யூதர்களின் மனநிலை மாறியது. இயேசுவுக்கு தாங்கள் செய்த துரோகம் அவர்கள் மனதை உறுத்தியது. நாமும் பேதுருவின் அருளுரைக்கு செவி கொடுத்து, நமது வாழ்விலும் ஒரு மாற்றம் ஏற்பட வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**இரண்டாவது வாசக முன்னுரை**

கிறிஸ்து உயிர்த்த பிறகு அவரை பின்சென்ற முதல் கிறிஸ்தவ மக்கள் பல்வேறு துன்ப துயரங்களைத் தாங்க வேண்டியிருந்தது. அவர்களும் அவற்றை துணிவோடும் மகிழ்ச்சியோடும் ஏற்றுக் கொண்டனர். நாமும், துன்புற்று வாழ்ந்த இயேசு கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி கிறிஸ்துவின் பாடுகள், மரணம் மற்றும் உயிர்ப்புக்கு சான்று பகர அருள் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் கிறிஸ்துவை போல நல்ல ஆயனாக செயல்பட்டு தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களின் மீட்புக்காகவும் அவர்களது வாழ்வியல் சிறக்கவும் தங்களையே அர்ப்பணிக்கும் மனத்திடத்தை அவர்களுக்கு அருளும்படி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2. அன்பின் இறைவா நாங்கள் அனைவரும் ஒரே மந்தையைச் சேர்ந்த ஆடுகள் என்பதை உணர்ந்து, ஒற்றுமையோடும், சகோதரத்துவத்தோடும் வாழ்ந்து உமது குரலுக்கு செவி கொடுத்து உமது அன்புக்குரிய மக்களாக வாழ அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. அன்பின் இறைவா, எங்களது அனுதின வாழ்வில் வருகின்ற துன்பங்களையும் இழப்பக்களையும் ஏற்றுக்கொண்டு உம்மை மட்டுமே பற்றிக் கொண்டு வாழவும் உமது மதிப்பீடுகளை வாழ்வாக்கி உமக்கு உரிய மக்களாக வாழ அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
4. அன்பின் இறைவா. உமது பணி இவ்வுலகில் தொடர போதுமான இறையழைத்தல் எம் திருச்சபைக்கு தாரும். எமது இளைஞர்கள், இளம் பெண்கள் உமது அன்பினால் தூண்டப்பட்டு உமது பணிக்காக தங்களை அர்ப்பணித்து வாழக்கூடிய மனப்பக்குவத்தையும் மனமுதிர்ச்சியையும் அவர்களில் ஏற்படுத்த வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.





6)உங்களை நேரில் காணும்போது தாழ்ந்து போகிறேன் ஆனால் தொலையில்…………..போது துணிவுடன் செயல்படுகிறேன் என்றா நினைக்கிறீர்கள்?:
7)இதோடு மூன்றாம் முறையாக நான்……………வருகிறேன். இரண்டு அல்லது மூன்று சாட்சிகளின் வாக்குமூலத்தாலே அனைத்துக் குற்றமும் உறுதி செய்யப்பட வேண்டும்.
10)………….கிறிஸ்துவோடு இணைந்திருக்கும்படி திருமுழுக்குப் பெற்ற நீங்கள் அனைவரும் கிறிஸ்துவை அணிந்து கொண்டீர்கள்.
12)நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவிடமிருந்தும் உங்களுக்கு………. அமைதியும் உரித்தாகுக!

**மேலிருந்து கீழ்**

1)எனவே இப்பொழுது நீங்கள் அவனை மன்னித்து ஏற்றுக்கொள்வதுதான் நல்லது. அவன் மனவருத்தத்தில் மூழ்கிவிடாமல் இருக்கும் வண்ணம் அவனுக்கு ஆறுதல்…………...
4)மாசிதோனியாவிற்கு வந்து சேர்ந்தபோது எங்களிடம் மன அமைதியே இல்லை. வெளியே போராட்டம் உள்ளே…………இவ்வாறு எல்லா வகையிலும் துன்புற்றோம்.
7)எனக்கு அருளப்பட்ட ஒப்புயர்வற்ற வெளிப்பாடுகளால் நான் இறுமாப்பு அடையாதவாறு பெருங்குறை ஒன்று என் உடலில் தைத்த முள் போல் என்னை வருத்திக் கொண்டே இருக்கிறது.
10)ஆனால் இப்பொழுது நீங்கள் கடவுளை ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள் உண்மையில் கடவுளே உங்களை ஏற்றுக்கொண்டிருக்கிறார். அப்படியிருக்க வலுவற்றவையும் வறியவையுமான பஞ்சபூதங்களிடம் திரும்பிப் போய் அவற்றுக்கு மீண்டும் ………. ஆவதற்கு நீங்கள் விரும்புவது ஏன்?
12)நான் மிகுந்த வேதனையோடும் மனக்கவலையோடும் கலங்கிய கண்களோடும் அதை உங்களுக்கு எழுதினேன். உங்களுக்கு மனவருத்தம் தரவேண்டும் என்பதற்காக அல்ல, மாறாக நான் உங்கள் மேல் கொண்டுள்ள மிகுந்த ……….. நீங்கள் உணரவேண்டும் என்பதற்காகவே அவ்வாறு எழுதினேன்.

**கீழிருந்து மேல்**

2)அவர்களின் உள்ளம் மழுங்கிப் போயிற்று. இன்றுவரை அந்தப் பழைய உடன்படிக்கை நூல்களை ……….. வாசிக்கும்போது அதே முக்காடு இன்னும் அகற்றப்படாமல் இருக்கிறது. கிறிஸ்துவின் வழியாய்த்தான் அது அகற்றப்படும்.
3)எவரும் குறைகூறா வண்ணம் எங்கள் திருப்பணியை ஆற்ற……… எனவே நாங்கள் எவருக்கும் இடையூறாக இருப்பதில்லை.
5)அவர்கள் எபிரேயரா? நானும் தான் அவர்கள் இஸ்ரயேலரா? நானும் தான் அவர்கள்………. வழிமரபினரா? நானும் தான்.
6)நான் உங்களோடு இருந்தபோது எனக்குப் பற்றாக்குறை ……….. இல்லை. எனினும் நான் உங்களில் எவருக்கும் சுமையாய் இருந்ததில்லை.
9)ஏற்கெனவே சொல்லியிருக்கின்றோம் இப்பொழுது மீண்டும் சொல்கிறேன்: நீங்கள் பெற்றுக் கொண்ட நற்செய்தியினின்று மாறுபட்ட ஒன்றை யாராவது உங்களுக்கு …………. அவர்கள் சபிக்கப்படுக!
11)தம் ஊனியல்பாகிய நிலத்தில் விதைப்போர் அந்த இயல்பிலிருந்து அழிவையே அறுவடை செய்வர். ஆவிக்குரிய வாழ்வாகிய நிலத்தில் விதைப்போர் அந்த ஆவி ……….. நிலைவாழ்வை அறுவடை செய்வர்.

**விடைகள் அனுப்ப இறுதி நாள் 25-04-2023**

**சென்ற மாதத்தின் விடைகள் 1 கொரிந்தியர்**

**வ. இ.** **1.** 1:4;**2.**4:3**;** **5**:8;17**;** **8**:13:4; **9.** 2:20;**11.**5:10
**இ. வ.** **3.** 5:4; **4.** 10:5; **6.** 10:1; **7.** 13:1; **10.**3:27;**12.**1:2
**மே. கீ.** **1.** 2:7; **4.**7:5; **7.** 12:7; **10.**4:9; **12.** 2:4**;**
**கீ. மே.** **2.** 3:14; **3.** 6:3; **5.**11:22; **6.**11:9; **9.**1:9; **11.**6:8;

# பார்புகழ் பாத்திமா அன்னை வரலாறு 11



கலைச்சுடர் முனைவர். ஜோ. விண்ணரசன், மேல்வழி

## இரண்டாம் காட்சியங்கு நிகழ்ந்த பாங்கு

கோவர்த்தன மலையருகே குழுமினர் பெருங்கூட்டம்
செபித்திட அல்ல சேவித்திடவும் அல்ல
அன்னையவர் காட்சியை நேரிலே பார்க்கவும்
சிறுவர்கள் சொன்னது நேருமோ என அறியவுமே
நண்பகல் மிகுந்ததால் அனைவரும் பசித்தனர்
அன்னையின் காட்சியும் எப்போதென அரித்தனர்
சுருங்கச் சொல்லின் பொருந்தச் சொல்லின்
முதல் திருப்பவனி அதுவே எனலாம்
சிறுவர் மூவரும் செபமாலை முடித்தனர்
ஓ என் இயேசுவே செபத்தை முணுமுணுத்தனர்
ஜெசிந்தா பிரான்சிஸ் லூசியா அழைத்தார்
சூரிய ஒளியினது மாற்றத்தை குடுத்தார்
கிழக்கே சூரியன் சுடரொளி மிகுந்தது
வழக்குக்கு மாற்றாக அதனொளி படர்ந்தது
அன்னையின் உருவம் மெதுவாக எழுந்தது
அசிந்திரா மரத்தினின் மேலேதான் அமர்ந்தது
அன்னையார் அமர்ந்த கிளைமட்டும் அதிர்ந்தது
மேலும் கீழுமாக வேகமாய் அசைந்தது
மூவருக்கு மட்டுமே உருவம் தெரிந்தது
மற்ற யாவருக்கும் கிளைஅசைவே புரிந்தது
அன்னையே நாங்கள் சொல்வது என்ன
அதனால் தாங்கள் இயம்புவது என்ன
லூசியா சிறுமி சத்தமாய் மீட்டினாள்
ஜெசிந்தா பிரான்சிஸ் சாந்தமாய் கேட்டனர்
அதிகம் அதிகமாய் செபித்திடல் வேண்டும்
நிந்தை பரிகாரங்கள் புரிந்திடல் வேண்டும்
நாளும் நாளுமே மிகுந்திடல் வேண்டும்
நாயகன் இதயத்துக்கு நேர்ந்திடல் வேண்டும்
அன்னை மொழிந்ததும் லூசியா தொடர்ந்தாள்
அண்டை வீட்டிலொரு அம்மையார் படுக்கையில்
அவதி படுவதை நீக்கிட கோரினாள்
அஞ்சி நடுங்கியபடி கெஞ்சியே வேண்டினாள்





வாழ்வுக்கு முற்றுப்புள்ளியிட்டு புதிய வாழ்க்கையை மேற்கொள்ள அருள் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள் , குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் எம்மாவு சீடர்கள் பெற்ற அதே இறை அனுபவத்தைபெற்று உயிர்த்த ஆண்டவருக்கு சாட்சிகளாக வாழ வரம் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. அன்பின் இறைவா, எங்களது கிறிஸ்தவ விசுவாச வாழ்வின் இரு கண்களாக இருப்பவை விவிலியமும் நற்கருணையும் என்பதை உணர்ந்து இறைவார்த்தையை அனுதினம் வாசிப்பதிலும் திருப்பலியில் பங்கேற்பதிலும் ஆர்வம் கொண்டு வாழ அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. அன்பின் இறைவா உயிர்த்த ஆண்டவரின் அனுபவத்தைப் பெற்ற சீடர்கள் துணிவோடு வாழ்ந்ததைப் போல நாங்களும் உமது இறை அனுபவத்தைப் பெற்று துணிவுடன் எங்களது கிறிஸ்தவ விசுவாச வாழ்வை தொடர துணை புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
4. அன்பின் இறைவா, திருமுழுக்கின் வழியாக பாவத்திற்கு இறந்து தூய்மை வாழ்வு வாழ உயிர்க்கப்பட்டுள்ள நாங்கள் எங்களது பழைய பாவ வாழ்வை விட்டு விட்டு, உம்மைப் போல தூய்மை நிறைந்த மக்களாக வாழ வரம் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

### உயிர்ப்புக் காலம் 4 ஆம் ஞாயிறு (30,04.2023)

**திப 2:74,38:41 1 பேது2:20-25யோவான் 10:1-10**

**முன்னுரை**

இன்று திருஅவை நல்லாயன் ஞாயிறை கொண்டாடுகிறது. இந்நாளை திரு அவை தேவ அழைத்தலின் நாளாகவும் சிறப்பிக்கின்றது. இன்றைய இறைசமூகத்தின் தலைவர்களும், இறைமக்களும் எப்படி இருக்க வேண்டும் என்பதை உணர்த்த மிகவும் அழகாக ஆழமாக ஒரு ஆயனின் குணநலன்களையும், ஆடுகளின் தன்மையையும் இன்றைய இறைவார்த்தை வழிபாடு அறிவுறுத்துகின்றது.

ஆடுகள் தங்களின் ஆயனை முழுமையாக நம்பியிருக்கின்றன. அவை தன் ஆயனை முழுமையாக அறிந்து வைத்திருக்கின்றன. மேலும் ஆயனும் தம்மந்தையை முழுமையாக அறிந்து வைத்திருப்பான். கிறிஸ்துவே நமது ஆயனாக இருந்து நம்மை அறிந்து நம்மை வழிநடத்துகின்றார். நம்மை பெயர் சொல்லி அழைத்தவர் நம்முன் நடந்து செல்கிறார். அதாவது நமக்குப் பாதுகாப்பும் கேடயமுமாக அமைகிறார். நாமும் அவர் குரலுக்கு செவிகொடுத்து அவரது மந்தையின் ஆடுகளாக இருந்து அவரது இரக்கத்தையும் அன்பையும் பெறுவோம்.

நல்லாயன் ஞாயிறு, இறை அழைத்தல் ஞாயிறு. “அறுவடை மிகுதி வேலையாள்களோ குறைவு, ஆகையால் தேவையான வேலையாள்களைத்தமது அறுவடைக்கு அனுப்பும்படி அறுவடையின் உரிமையாளரிடம் மன்றாடுவோம் இத்திருப்பலியில்

4. அன்பின் இறைவா எங்களது அனுதின கிறிஸ்தவ வாழ்வில் உமது உயிர்ப்பில் முழுமையான நம்பிக்கை கொண்டு அவ்வுயிர்ப்புச் செய்தியை எல்லாருக்கும் அறிவித்திட தேவையான இறையருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**உயிர்ப்புக் காலம் 3 – ஆம் ஞாயிறு (23,04,2023)**

**திப 2:14,22-23 1பேதுரு 1:17-21 லூக் 24:13-35**

**முன்னுரை**

எம்மாவுஸ் அனுபவம் ஒரு திருப்பலி, நற்கருணைப் பலி, எம்மாவுஸ் அனுபவம் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது. இயேசு இறைவார்த்தையை விளக்கிய போது சீடர்களின் உள்ளம் பற்றி எரிந்தது. இயேசு அப்பம் பிடும்போது அவர்கள் இயேசுவைக் கண்டு கொண்டனர். இயேசுவின் இறப்புக்கு பிறகு கதிகலங்கி , நம்பிக்கை இழந்து கவலையுடன் எம்மாவுக்குப் பயணித்த சீடர்களின் பயணத்தின் போது, மெசியா பாடுபட்டே மாட்சிமை அடைய வேண்டும் என்பதை திருவிவிலியத்தைக் கொண்டு கிறிஸ்து விளக்கினார்.

இரண்டு சீடர்கள் கிறிஸ்துவின் விவிலிய விளக்கத்தைக் கேட்டபோது, அவர்களுடைய உள்ளம் பற்றி எரிந்தாலும் அவர்கள் அவரை அடையாளம் கண்டுகொள்ளவில்லை. ஆனால் கிறிஸ்து அப்பத்தை பிட்டுக் கொடுத்தபோது, அவர்கள் கண்கள் திறக்கப்பட்டு அவரை அடையாளம் கண்டுகொண்டனர். தொடக்கக் காலக் கிறிஸ்தவர்கள் ஒன்று கூடிய போதெல்லாம் அப்பம் பிட்டனர். எனவே நற்கருணையின்றி திரு அவை இல்லை. திரு அவை இன்றி நற்கருணை இல்லை. எனவே நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைவரை, நற்கருணைக் கொண்டாட்டத்தில் கிறிஸ்துவை அடையாளம் காண திரு அவை அழைப்பு விடுக்கின்றது. ஒவ்வொரு திருப்பலியும் ஒரு எம்மாவு பயணம் என்பதை உணர்ந்து, இறைவார்த்தை வழிபாட்டில் கிறிஸ்துவை அறிந்து கொண்டு, நற்கருணை விருந்தில் அவரைக் கண்டு மகிழவும் அருள் வேண்டி இத்திருப்பலியில் பங்கு பெறுவோம்.

**முதல் வாசக முன்னுரை**

இயேசு உயிர்த்த பிறகும் யூதர்களுக்கு பயந்து நடுங்கிக் கொண்டிருந்த திருத்தூதர்களுக்கு இயேசு பலமுறை தோன்றி அவர்களை திடப்படுத்தினார். எனினும் அவர்கள் தூய ஆவியை பெற்ற பிறகு தான் துணிவு பெற்றார்கள். இயேசுவை மும்முறை மறுதலித்த பேதுரு இப்போது யாருக்கும் அஞ்சாமல் இயேசுவைப் பற்றி அறிவிக்கின்றார். நாமும் அத்தகைய ஆவியைப் பெற்று துணிவுடன் வாழ அருள் வேண்டி இவ்வாசகததிற்கு செவிமடுப்போம்.

**இரண்டாவது வாசக முன்னுரை**

திருத்தூதர் பேதுரு கிறிஸ்தவ மக்களுக்கு, குறிப்பாக புதிதாக திருமுழுக்குப் பெறவிருந்தவர்களுக்கு வழங்கிய அறிவுரையின் ஒரு பகுதியே இன்றைய 2 வது வாசகம். திருமுழுக்கு இயேசு கிறிஸ்துவில் நம்மை ஒரு புதிய படைப்பாக மாற்றுகிறது. ஆகவே இனி பழைய பாவ





# ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்

அருள்பணி. ஆனந்த் லூர்துராஜ் ம.ஊ.ச,
அமலோற்பவ மாதா ஆலயம், பூம்பொழில்நகர்.



**உயிப்பு ஞாயிறு (09,04,2023)**

**திபா 10:34, 37-43 கொலோ 3:1-4 யோவா 20:1-9**

**முன்னுரை**

கிறிஸ்தவ சமயம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும் பசுமையாக இருப்பதற்கு காரணம் அது கிறிஸ்துவின் உயிர்ப்பை அடித்தளமாகக் கொண்டுள்ளது. கிறிஸ்து தான் முன்னறிவித்தபடி இறந்த மூன்றாம் நாள் கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தார். இன்றைய நற்செய்தியில், யோவான் காலியான கல்லறைக்குள்ளே சென்றார். கண்டார், நம்பினார். காலியான கல்லறை யோவானுக்கு வழங்கிய செய்தி கிறிஸ்து உயிர்த்துவிட்டார். திருத்தூதர்களுடைய போதனையின் மையக்கரு கிறிஸ்துவின் இறப்பும் உயிர்ப்புமாகும். திருத்தூதர் அனைவரும் ஆண்டவர் இயேசு உயிர்த்தெழுந்தார் என மிகுந்த வல்லமையோடு சான்று பகர்ந்தனர்.

உயிர்த்த ஆண்டவர் எந்நாளும் நம்முடன் இருக்கிறார். பயணிக்கிறார், உரையாடுகிறார். பேய்களை ஓட்டி, நோய்களைக் குணமாக்கி, ஆவியால் நிரப்புகிறார். மறைநூலை புரிந்து கொள்ளும் வண்ணம் நமது மனக்கண்களைத் திறந்து விடுகிறார். அப்பம் பிடுகையில் அவரை அடையாளம் கண்டு கொள்ளச் செய்கிறார். ஒருவர் ஒருவரை அன்பு செய்து, மண்ணுலகின் இறுதி எல்லை வரை அவருடைய சாட்சிகளாக மாற்றுகிறார். சின்னஞ் சிறியவர்களிடமும் தம்மை வெளிப்படுத்தி அவர்களுக்கு உதவி புரியும் நல்லுள்ளத்தை நமக்கு நல்குகிறார். எனவே ஆண்டவரின் உயிர்ப்பு நாளாகிய இன்று, துணிவு கொள்வோம், மகிழ்வுடன் இருப்போம். நாம் உயிர்ப்பின் மக்களாக வெற்றியின் மனிதர்களாக வாழ்வோம்.

**முதல் வாசக முன்னுரை**

இயேசுவின் தலையான சீடரும் அவருடைய வாழ்க்கையில் நெருக்கமாக பங்கு கொண்டவருமான புனித பேதுரு தொடக்க திருச்சபைக்குத் தந்த மறையுரையின் ஒரு பகுதியே இன்றைய முதல்வாசகம். பேருருவின் இச்சிறிய உரை ஒரு இயேசு கிறிஸ்துவைப் பற்றிய மகத்தான பல உண்மைகளைத் தொடுத்து தந்துள்ளது. இயேசு கிறிஸ்துவை அறிவித்து அவருக்கு சாட்சியம் சொல்வதே திரு அவையின் பணி. உயிர்த்த ஆண்டவரை பின்பற்றும் நாமும் கிறிஸ்துவுக்கு

சாட்சிகளாய் வாழ இறையருள் வேண்டி இவ்வாசகததிற்கு செவிமடுப்போம்.

**இரண்டாவது வாசக முன்னுரை**

இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்புத் திருநாளாம் இன்று நாமும் இயேசுவோடு உயிர்த்து எழுந்து புதிய வாழ்வு வாழ புனித பவுல் நமக்கு அழைப்பு விடுக்கின்றார். நாமும் இவ்வுலகிற்குரிய ஊனியல்பின் இச்சைகள், பகைமை , சண்டை , சச்சரவு, பொறாமை இவற்றை விடுத்து மேன்மைக்குரிய அன்பு , மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, தன்னடக்கம் ஆகியவற்றை வாழ்வாக்கிட வரம் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்.**

1. அன்பின் இறைவா, எம் திருத்தந்தை , ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் அனைவரும், உயிர்த்த ஆண்டவரின் இறையனுபவத்தைப் பெற்று அவரது பாடுகள், இறப்பு மற்றும் உயிர்ப்புக்கு சாட்சிகளாக வாழ வரம் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2. அன்பின் இறைவா, உமது மகனின் உயிர்ப்பு எங்களை எல்லா தீமைகளிலிருந்தும், பாவங்களிலிருந்தும் விடுவித்து நாங்கள் உயிர்ப்பின் மக்களாக வாழ வரம் தரவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. அன்பின் இறைவா, உமது உயிர்ப்பின் அனுபவத்தைப் பெற்ற நாங்கள் மண்ணுலகிற்கு உரியவற்றை நாடாமல் விண்ணுலகிற்குரிய காரியங்களைக் குறித்து செயல்பட தேவையான இறை ஞானத்தை எங்களுக்குத் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
4. அன்பின் இறைவா, உமது மகனின் உயிர்ப்பு எங்களுக்கும் எங்கள் குடும்பங்களுக்கும் , அமைதி, ஒற்றுமை, நம்பிக்கை மற்றும் மகிழ்ச்சியைத் தருகின்ற ஓர் உன்னத அனுபவமாக மாறிட துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**உயிர்ப்புக் காலம் 2 ஆம் ஞாயிறு (16,04,2023)**

**திபா 2:42-47 1பேதுரு 1:3-9 யோவா 20:18-31**

**முன்னுரை**

இன்றைய நவீன உலகில் மனிதன் யாரையும் முழுமையாக நம்பமுடியாமல் வாழ்வில் மகிழ்ச்சியையும் அமைதியையும் இழந்தவனாக வாழ்ந்து கொண்டு இருக்கின்றான். இந்நிலையில், கடவுள் நம்பிக்கையும் தேய்ந்து கொண்டு போகிறது. மானிட மகன் வரும்போது மண்ணுலகில் நம்பிக்கையைக் காண்பாரோ? என்ற பெரிய கேள்வியைக் கேட்டுள்ளார் கிறிஸ்து.

இன்றைய நற்செய்தியில், கிறிஸ்துவை கண்ணால் கண்டு அவரைக் கையால் தொட்டுப் பார்த்தால் மட்டுமே அவர் உயிர்த்தார் என்பதை நம்புவதாகச் சொல்லுகிறார் தோமா . ஆனால் உயிர்த்த கிறிஸ்துவை தமது கண்ணால் கண்டபோது 'நீரே என் ஆண்டவர் நீரே என் கடவுள்' என்று தனது ஆழ்ந்த நம்பிக்கையை அறிக்கையிடுகின்றார். அவநம்பிக்கையின் அதாலப் பாதாளத்தில் விழுந்த தோமா, நம்பிக்கையின் சிகரத்தைத் தொடுகிறார். தோமாவின் அவ நம்பிக்கை நமது நம்பிக்கைக்கு வித்தாக அமைந்துள்ளது. தோமாவின் அவநம்பிக்கையை கண்டித்து கிறிஸ்து அவரிடம், 'நீ என்னைக் கண்டதால் நம்பினாய், காணாமலே நம்புபோர் பேறுபெற்றோர். எனக் கூறினார். நாம் தோமாவை விடப் பேறுபெற்றவர்கள். ஏனெனில் நாம் கிறிஸ்துவைக் காணாமலே அவரை நம்புகிறோம். ஆண்டவரின் பேருவகையில் நிலைத்து வாழ்ந்திட அருள் வேண்டி இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.

**முதல் வாசக முன்னுரை**

நம்பிக்கை மட்டும் போதாது. நம்பிக்கை அன்பு மூலம் எண்பிக்கப்பட வேண்டும். கிறிஸ்தவ மதத்தின் சுருக்கம் அன்பின் வழியாகச் செயலாற்றும் நம்பிக்கை. தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள் மேற்கொண்ட வாழ்க்கை முறையையே இன்றைய முதல் வாசகம் விவரிக்கின்றது. நம்பிக்கை கொண்டோர் அனைவரும் ஒன்றாயிருந்தனர். எல்லா உடைமைகளையும் பொதுவாய் வைத்திருந்தனர். அவர்களிடம் நம்பிக்கையும் அன்பும் இணைந்திருந்தது. நாமும் இத்தகைய வாழ்வை வாழ்ந்திட அருள் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**இரண்டாவது வாசக முன்னுரை**

இன்றைய வாசகத்தில் திருமுழுக்கு ஒரு நம்பிக்கை தரும் புதுப்பிறப்பு என்றும், அதனால் கிடைக்கும் உரிமைப் பேறு அழியாதது என்றும் புனித பேதுரு திட்டவட்டமாக கூறுகிறார். அத்தகைய திருமுழுக்கைப் பெற்று நாமும் பாவத்தை விடுத்து புதிய படைப்புகளாக மாறி இவ்வுலகில் இயேசுவின் மதிப்பீடுகளை வாழ்வாக்கிட அருள் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், மற்றும் பொதுநிலையினர் அனைவரும் உயிர்த்த ஆண்டவரின் அனுபவத்தைப் பெற்று, புனித தோமாவைப் போல் என் தேவனே, என் இறைவனே என்று தங்களது விசுவாசத்தை உறுதியோடு அறிவித்திட தேவையான இறையருள் வேண்டி உம்மை மன்றாடுகின்றோம்.
2. அன்பின் இறைவா, உமது உயிர்ப்பின் பெருவிழாவைக் கொண்டாடும் நாங்கள் உமது உயிர்ப்பின் வழியாக பெற்றுக் கொண்ட சமாதானம், நம்பிக்கை மற்றும் மகிழ்ச்சி ஆகிய கொடைகளை பிறரோடு பகிர்ந்து வாழ வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. அன்பின் இறைவா, திருமுழுக்கு என்கின்ற அருள் அடையாளத்தின் வழியாக ஒரே குடும்பமாக வாழ அழைக்கப்பட்ட நாங்கள் ஒவ்வொருவரும் எங்களிடயே இருக்கின்ற வேறுபாடுகளைக் களைந்து ஒரே உள்ளத்தோடும், ஒரே மனத்தோடும் வாழ்ந்து ஆதிக்கிறிஸ்தவர்களின் வாழ்வைத் தொடர்ந்திட அருள் தரவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.